விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 11 சனிக்கிழமை (28.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283

## இது சிங்கள பௌத்த நாடாகும்
# இதை ஏற்காதவர்கள் வெளியேறுங்கள்
### ஞானசார தேரர் தெரிவிப்பு



(கொழும்பு) இது சிங்கள பௌத்த நாடாகும். இதனை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டும் இந்த நாட்டில் இருக்கலாம். ஏற்காதவர்கள், தங்களது உடமைகளுடன் தாராளமாக வேறு நாடுகளுக்கு செல்லலாம் என பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## சஜித் எமக்கு சவால் இல்லை
### மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள சஜித் பிரேமதாஸ பொதுஜன பெரமுனவிற்கு சவாலானவர் இல்லை என எதிர்க் கட்சித் தலைவர் 23

### கொடிகாமத்தில்
## மயங்கி விழுந்த முதியவர் மரணம்

(கொடிகாமம்)
கடையைப் பூட்டி விட்டு கொடிகாமம் மடத்தடி ஒழுங்கையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை மயங்கி விழுந்த முதியவர் மரணமடைந்துள்ளார்.
இந்தச்சம்பவம்நேற்று வெள்ளிக்கிழமை இரவு 23

### கூட்டமைப்பு அரசை ஆதரித்து
## தனது பிரச்சினைகளையே தீர்த்துச் செல்கிறது – மகிந்த

(கொழும்பு)
30 ஆண்டுகள் நடைபெற்ற போரை முடிவுக்கு கொண்டு வந்து, வடக்கு மக்கள் தெற்கு பகுதி வரவும் தென் பகுதி மக்கள் வட பகுதிக்கு செல்லவும் அமைதியை ஏற்படுத்திக் கொடுத்து, வடக்கின் அபிவிருத்திக்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமது அரசாங்கமே செய்தது என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் யாழ்.மாவட்ட பனை கள்ளு உற்பத்தியாளர்களை நேற்று சந்தித்தபோதே எதிர்க் கட்சித் தலைவர் இதனைக் கூறியுள்ளார். 23

## பாதுகாப்பு இல்லாததால் யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாது என கோத்தா நீதிமன்றுக்கு அறிவிப்பு
### தேர்தல் பிரசாரத்துக்கு வருவாரா? யாழில் குமார் குணரட்ணம் கேள்வி

(யாழ்ப்பாணம்)
லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கிற்கு பாதுகாப்புக் காரணமாக நேற்றைய தினம் யாழுக்கு வர முடியாது என நீதிமன்றுக்குத் தெரிவித்திருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, எவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்கு வரப்போகிறார் என முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் கேள்வி எழுப்பினார்.
நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கிற்காக யாழ்ப்பாணம் வருகை தந்தபோது யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், 2011ஆம் ஆண்டு முன்னிலை சோசலிசக் கட்சியின் செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகிய இருவரும் யாழில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி அறிவதற்காக யாழ்ப்பாணம் வருகைதந்த நிலையில் அச்சுவேலிப் பகுதியில் 23

## முறையான சட்டம் இல்லாததால் சுதந்திரமான தேர்தலுக்கு பெரும் சவால்
### தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)
தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு எதிராக உரிய சட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கலும் தாமதமும் தான் சுதந்திரமான தேர்தலுக்கு சவாலாக உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
மகிந்த தேசப்பிரிய மேலும் கூறியுள்ளதாவது,
"தேர்தலுடன் வன்முறையும் ஒன்றித்து போயுள்ளமை, இலங்கையில் இன்று, நேற்று ஏற்பட்ட கலாசாரமல்ல.
1947, 1952, 1956, 1960, 1965, 1970, 1974ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் இருந்து தொடர்ந்து வரும் ஒரு தேர்தல் கலாசாரமாகவே இந்த வன்முறை காணப்படுகிறது.
இந்த வன்முறையானது, வாக்குச்சாவடியில் துப்பாக்கிச் சூடு நடத்தும் அள 23

## மன்னாரில் இன்று மாபெரும் சைவ எழுச்சி மாநாடு

(மன்னார்)
மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவையின் ஏற்பாட்டில் இன்று 28ஆம் திகதி சனிக்கிழமை மன்னாரில் மாபெரும் சைவ எழுச்சி மாநாடு இடம்பெறஉள்ளதாக மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் தலைவர் சிவசிறி மஹா தர்ம குமார குருக்கள் தெரிவித்தார்.
இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் 23

## எவ்வித நிபந்தனைகளும் சஜித்துக்கு விதிக்கவில்லை
### அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு தமது கட்சியின் சார்பில் தாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என 23

### சுன்னாகம் பிரதேச சபை
## உறுப்பினரின் வீடு மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வலி.தெற்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரின் வீடு மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
சம்பவத்தில் வீட்டு முற்றத்திலிருந்து உரையாடிக் கொண்டிருந்த பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவர்களது உறவினர்கள் தெய்வாதீனமாக பாதிப்புகளின்றித் தப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் 23

### தீக்காயத்துக்குள்ளான
## குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
மண்ணெண்ணெய் ஊற்றும் போது தவறுதலாக தீப்பற்றியதில் நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 23

## கோத்தாவை தோற்கடிப்போம்
### அமைச்சர் அஜித் பி.பெரேரா

(கொழும்பு)
சஜித்துடன் இணைந்து முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளருமான கோத்தபாய ராஜபக்ஷவை தோற்கடிப்போம் என்று அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.
டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச் 23

# கைப்பையில் பணம் திருடிய பெண் மடக்கிப்பிடிப்பு

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் பேருந்தில் இருந்து இறங்க முற்பட்ட பெண் ஒருவரின் கைப் பையில் இருந்து பணம் திருடிய பெண் ஒருவர் மடக்கிப் பிடிக் கப்பட்டார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்ப வம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா பழைய பேருந்து நிலையம் பகுதிக்கு வந்த பேருந்து ஒன்றில் இருந்து தாயும், மகனும் இறங்க முற்பட்ட வேளை, குறித்த பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் பேருந்தில் இருந்து இறங்க முற்பட்ட பெண்ணின் கைப்பையை திறந்து அதில் இருந்த பணத்தை திருடியுள் ளார்.

இதனையடுத்து குறித்த தாயும், மகனும் அப் பெண்ணை துரத்திச் சென்ற போது அவர் அவசர அவசரமாக சென்று முச்சக்கர வண்டி ஒன்றில் தப்பி யோட முயன்றுள்ளார்.

இதனையடுத்து அவர் மடக் கிப் பிடிக்கப்பட்டார். இதன் போது அவ்விடத்தில் பொது மக்கள், பொலிஸார் வந்ததையடுத்து குறித்த பெண் திருடியதாக கூறப்பட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு மன்னிப்பு கோரினார்.

இதன்பின் எச்சரிக்கப்பட்டு குறித்த பெண் விடுவிக்கப்பட் டார். (ம-3,250)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது

# ஊடகங்கள் இடையூறு ஏற்படுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது ஊடகங்களால் ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமாயின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தயாராக இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் மூலோபாய மற்றும் சர்வதேச தொடர்பு கல்வி நிறுவனத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட போதே தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இந்த விடயத்தை குறிப்பிட் டார்.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு சட்ட ரீதியான இடையூறுகள் இருப்பதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்



பிரிய தெரிவித்துள்ளார்.

சட்டத்தை அமுலாக்குவதற்கான சிக்கல்கள் மற்றும் சட்டத்தை வலுப்படுத்துவதற்கான பிரச்சினைகள் ஒரு சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு பெரும் தடையாக மாறியுள்ளதாகவும் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான கடுமையான கொள்கைகள் பிரச்சினையை தீர்க்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் போது தொலைக்காட்சி, வானொலி உள்ளிட்ட ஊடகங்களால் ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமாயின் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் அழுத்தங்களினால் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலை நடத்துவதற்கு தடை ஏற்படுமாயின் அதற்கு பொறுப்பான அலைவரிசைக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இந்நிலையில் தனியார் அலைவரிசைகளுக்கு பணம் செலுத்தி தேர்தலுக்கு அழுத்தத்தை மேற்கொள்ளக்கூடிய கூற்றுக்கள் அல்லது கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை என் றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை மகேந்திரன்



எமது சங்கத்தின் அங்கத்தவரும் சண்டிலிப்பாய் சமூக மருத்துவ உத்தியோகத்தருமான **Dr.வனிதா** அவர்களின் அன்புத்தந்தை **வேலுப்பிள்ளை மகேந்திரன்** அவர்களின் பிரிவுத்துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம் இலங்கை

(451)


# வவுனியாவில் மோ.சைக்கிள் துவிச்சக்கரவண்டி விபத்து

## இருவர் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா, குட்செட் வீதியில் மோட்டர் சைக்கிள் - துவிச்சக்கர வண்டி என்பன மோதி விபத்துக் குள்ளானதில் இருவர் படுகாய மடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, வவுனியா, குட்செட் வீதியில் ஆலடிச் சந்தி நோக்கிப் பயணித்த முதியவர் மீது அதே திசையில் வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

இந் நிலையில் அங்கிருந்த பொதுமக்கள் 1990 என்ற அவசர நோயாளர் காவு வண்டிக்கு தொடர்பு கொண்டு அதனூடாக படுகாயமடைந்த இருவரையும் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,250)


## மரண அறிவித்தல்

### பேரம்பலம் கருணாகரன்

பிறப்பு 24 • 04 • 1961



இறப்பு 25 • 09 • 2019

*புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட பேரம்பலம் கருணாகரன் அவர்கள் கடந்த (25.09.2019) புதன்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.*

*அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற பேரம்பலம் - செங்கமலம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், புதுக்குடியிருப்பை சேர்ந்த இரத்தினசிங்கம் - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், இரஞ்சினியின் (ஆசிரியை - புதுக்குடியிருப்பு R.C பாடசாலை) அன்புக் கணவரும், தம்பிராசா, காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சபாரத்தினம், சுபத்திராதேவி, தவமணிதேவி ஆகியோரின் அருமைச் சகோதரரும் தயாசிறி, சந்திரகுமார் (அதிபர் - முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கோம் பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயம்) சுமதி, கோமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.09.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

7ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(C-7722)

தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு :
077 335 0054, 071 532 7037



## ஆடு விற்பனைக்கு

மறி ஆடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**077 122 9019**

(445)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இந்து கௌரவ குடும்பம் 1983 இல் பிறந்த சூரியன் செவ்வாய் 10 இல் பா.கிர. 15 1/2, இடப ராசி கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு :
**077 063 4154**

(443)

## சேவை முகவர்
## காணிகள் வீடு விற்பனைக்கு

ஓட்டுமடம் வீடு 2 1/2, நாவலர் வீதி புறூடி லேன் வீடு 1 1/2, திருநெல்வேலி 4 பரப்பு காணி விற்பனைக்கு. (விற்கவிரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்) தரகர் தேவை இல்லை.

**சுந்தரம் - 077 481 9801**

(449)

## குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

### ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

| | |
|---|---|
| எளியமுறை உடற்பயிற்சிகள் | எளியமுறை தியானப்பயிற்சிகள் |
| காயகல்ப்பப் பயிற்சி | அகத்தாய்வுப் பயிற்சிகள் |

மேற்குறித்த பயிற்சியில் உடல் உளம் உயிர் மனம் சார் பயிற்சியை மேம்படுத்துவதற்கு தங்களின் வருகை அவசியமானதாகும். எனவே தங்களின் வருகையை உறுதிப்படுத்துவதற்குத் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் தொடர்பு கொள்ளவும். மேற்குறித்த பயிற்சியை இந்தியா தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகைதரும் முதுநிலைப் பேராசிரியர் **S.**இந்திரா அவர்கள் வழங்கவுள்ளார் என்பதை அறியத்தருகின்றோம்.

**காலம் : 28.09.2019 சனிக்கிழமை தொடக்கம்**
**04.10.2019 வெள்ளிக்கிழமை வரை**

**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை**


**பயிற்சிகளை வழங்குபவர்கள் :மனவளக்கலை பேராசிரியர் S.இந்திரா**
**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

(446)

அகத்தாய்வு 1ம் நிலை 28.09.2019 சனிக்கிழமை மற்றும் 29.09.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கும் நடைபெறும்.

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:0212222772**

# சிங்களவர்களுடன் தமிழர்கள் இணைந்து வாழவே முடியாது



## முல்லையில் நடந்த கொடூரம் சான்று வைகோ சுட்டிக்காட்டு

**(சென்னை)**

**சிங்களவர்களுடன் தமிழ் மக்கள் ஒருபோதும் இணைந்து வாழ முடியாது என்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடந்த கொடூர நிகழ்வே சான்றாகும் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ தெரிவித்தார்.**

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டமைக்கு ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ கடும் கண்டனம் வெளியிட்டார்.

இது குறித்து அவர் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், இலங்கை அரசின் உதவியோடு பௌத்த பிக்குகள் நடத்தியிருக்கும் இத்தகைய அக்கிரமங்களைப் பன்னாட்டு சமூகம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

தமிழர்களைக் கொன்று குவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் இராணுவ அதிகாரிகள் மீது இனப்படுகொலை வழக்கு பதிவு செய்து, பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டிக்காமல் இருப்பதால்தான், இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இத்தகைய பண்பாட்டு அழிப்பு நடவடிக்கைகள் மேலோங்கி வருகின்றன.

இலங்கை என்பது இருவேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடு. தமிழீழத்தில் இலட்சக்கணக்கான தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டு, பத்து ஆண்டுகள் கடந்துவிட்டன.

இலங்கை அரசால் கொன்று குவிக்கப்பட்ட தமிழர்கள் போக, எஞ்சியுள்ள தமிழர்களை, கட்டமைக்கப்பட்ட பண்பாட்டுத் தாக்குதல்கள் மூலம் அழித்து ஒழிப்பதில் இலங்கை அரசும், பௌத்த மதவாதக் கும்பலும் கரம் கோர்த்துக்கொண்டு செயற்படுகின்றன.

தனித் தமிழீழம் அமைப்பதற்கு ஈழத்தமிழர்களிடமும் உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்த ஐ.நா. சபையும் பன்னாட்டுச் சமூகமும் இனியாவது முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.' என வைகோ மேலும் வலியுறுத்தினார். (இ-7)

# கொலைகாரனைக் காப்பாற்றும் நீதிமன்றத் தடையைக் கண்டிப்போம்!

## யாழில் நேற்றுப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே? கொலைகாரனைக் காப்பாற்றும் நீதிமன்றத்தடையைக் கண்டிப்போம் போன்ற பதாகைகளுடன் யாழில் காணாமல் ஆக்கப்பட்ட லலித் , குகனுக்கு நீதி கோரி நேற்று யாழ்.மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.


காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத்தரக் கோரி முன்னிலை சோசலிசக் கட்சியினரால் இப்போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஈழத்தில் அன்று என்ன நடந்ததோ அது இன்று காஷ்மீரில் நடக்கிறது

## ஆர்ப்பாட்டத்தில் சீமான் ஆவேசம்

(டில்லி)

ஈழத்தில் அன்று என்ன நடந்ததோ அது இன்று காஷ்மீரில் இடம்பெற்று வருகின்றது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் ஆவேசமாகத் தெரிவித்தார்.



ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் இயல்பு நிலையைக் கொண்டுவர வலியுறுத்தி நாம் தமிழர் கட்சியின் ஏற்பாட்டில் டில்லியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வலிதாங்கிய மக்கள் நாம் என்றும் எங்களால் தான் பிறிதொரு தேசிய இனத்தின் வலியை உணரமுடியும்.

எந்தவொரு முடிவை எடுக்க வேண்டுமானாலும் காஷ்மீர் மக்களின் முடிவை கேட்டபின்பே எடுக்க வேண்டும்.

ஆனால் இன்று மக்களின் விருப்பத்தைக் கேட்காமல், அந்த மாநிலத்தின் ஜனநாயகத் தலைவர்களை வீட்டுக்காவலில் வைத்து விட்டு, இராணுவத்தினரை குவித்து வைத்து அம்மக்களுக்கு விடுதலையை பெற்றுக்கொடுத்து விட்டோம் எனக் கூறுவது வேடிக்கையானது.

இந்தியா என்பது மாநில அரசுகளின் ஒன்றியம் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில்கொள்ள வேண்டும்" எனச் சீமான் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

**28.09.2019**

புரட்டாதி 11, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
அமாவாசை பின்னிரவு 12.42மணிவரை
உத்தரம் முன்னிரவு 11.22 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
மஹாளய பக்ஷமுடிவு,
அமாவாசை விரதம்

வளவன்

கிரகநிலை: ராகு; சந்; சூரி, செவ், சுக்; புத; குரு; சனி, கேது

சந்திராஷ்டமம்: சதயம், புரட்டதி

**மீனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள்.

**மேடம்:** மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.

**மிதுனம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், போசனசுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்:** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், எதிர்ப்புகளை சந்திக்கும் வாய்ப்புண்டு, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்:** கூட்டு முயற்சிகள் நன்மை தரும், உடன்பிறப்புக்கள் உங்களின் கருத்துக்களை ஏற்று நடப்பர், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**சிம்மம்:** விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**தனுசு:** கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்ப ஒற்றுமை கூடும், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.


**விருச்சிகம்:** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**கன்னி:** பணத்தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்தித்து மகிழ்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

– இலங்கை– பாகிஸ்தான் –

# முதல் ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது



கராச்சியில் நேற்று நடைபெற இருந்த பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி மழையால் கைவிடப்பட்டது.

பாகிஸ்தானில் இலங்கை அணி கடந்த 2009-ம் ஆண்டு சுற்றுப் பயணம் செய்த போது வீரர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதில் இலங்கை வீரர்கள் காயம் அடைந்தனர். அதன்பின் எந்தவொரு அணியும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாட பாகிஸ்தான் செல்ல வில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டின் தொடர் முயற்சியால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது இலங்கை அணி ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாட சம்மதம் தெரிவித்தது.

அதன்படி முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி கராச்சி சர்வதேச மைதானத்தில் நேற்று நடைபெறுவதாக இருந்தது. பாகிஸ்தான் கிரிக்கெட்டில் இது புதிய வரலாறு என ஒவ்வொரு வீரர்களும் மகிழ்ச்சியுடன் கூறி வந்தனர்.

போட்டி சரியான 3 மணிக்கு தொடங்கும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், திடீரென கனமழை பெய்தது. மழை நின்றாலும் மைதானத்தை உடனடியாக சரி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் நேற்றைய ஆட்டம் கைவிடப்பட்டது.

பல தடைகளை கடந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பாகிஸ்தான் மண்ணில் கிரிக்கெட் மலருகின்ற நிலையில், மழை அதற்கு தடைபோட்டுள்ளது. 2-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நாளை (ஞாயிற்றுக்கிழமை) 29-ந்திகதி நடக்கிறது. (ம)

# டெஸ்ட் கிரிக்கெட்டில் ரோகித் சர்மா சாதிப்பார்

## ரகானே நம்பிக்கை



டெஸ்ட் கிரிக்கெட்டில் மீண்டும் விளையாட வாய்ப்பு கிடைத்தால் ரோகித் சர்மா சிறப்பாக ஆடுவார் என்று இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் துணை கப்டன் அஜிங்யா ரகானே தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் துணை கப்டன் அஜிங்யா ரகானே மும்பையில் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட்டில் ரோகித் சர்மா தொடக்க ஆட்டக்காரராக இறங்குவாரா? என்பது குறித்து எனக்கு இன்னும் தெரியாது. அவர் தொடக்க வீரராக இறங்கினால், எனக்கு மகிழ்ச்சி தான். வெஸ்ட் இண்டீசில் நடந்த டெஸ்ட் தொடரின் போது, ரோகித் சர்மா போன்ற திறமையான வீரரை வெளியே உட்கார வைத்தது கடினமாக இருந்ததாக சொல்லியிருந்தேன். அவர் கடினமாக உழைத்து வருகிறார். மீண்டும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் அவர் நன்றாக செயல்படுவார்.

ரோகித் சர்மாவிடம் சிறப்பு வாய்ந்த திறமை இருப்பதை நாங்கள் அறிவோம். டெஸ்ட் கிரிக்கெட்டில் சாதிப்பது என்பது மனநிலையை சார்ந்த விஷயம் ஆகும். ஒரு நாள் கிரிக்கெட்டில் இறங்கும்போது, நம் திறமை மீது நம்பிக்கை வைத்து விளையாட வேண்டியது தான். ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் சில நேரம் இரண்டு பந்து வீச்சாளர்கள் துல்லியமாக பந்து வீசி தொடர்ந்து நெருக்கடி கொடுத்தால், வழக்கமான ஆட்ட பாணியை கைவிட்டு அவசரப்படாமல் சுதாரித்து கொள்ள வேண்டும். அத்தகைய பந்து வீச்சை சமாளித்து, அதன பிறகு உங்களது வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

டெஸ்ட் கிரிக்கெட்டை தவிர, ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் நான் உண்மையிலேயே உற்சாகமாக அனுபவித்து விளையாடுகிறேன். மீண்டும் ஒரு நாள் போட்டி அணிக்கு திரும்ப விரும்புகிறேன். ஆனால் இப்போதைக்கு தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர் மீதே முழு கவனமும் உள்ளது. இவ்வாறு ரகானே கூறினார்.

# இந்திய அணியில் 4வது இடத்தில் என்னால் துடுப்பெடுத்தாட முடியாது

## சுரேஸ் ரெய்னா தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் இடது கை பட்ஸ்மேனான சுரேஷ் ரெய்னா, இந்திய அணிக்காக 4-வது இடத்தில் களம் இறங்கி துடுப்பாட்டச் செய்ய தயார் என்று தெரிவித்துள்ளார்.


இந்திய தேசிய கிரிக்கெட் அணி கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நான்காவது இடத்திற்கு நிலையான வீரரை கண்டுபிடிக்க முடியாமல் தத்தளித்து வருகிறது.

தற்போது ரிஷப் பந்த் களம் இறங்குகிறார். ரிஷப் பந்தும் எதிர்பார்த்த அளவிற்கு ஜொலிக்கவில்லை. இந் நிலையில் நான்காவது இடத்தில் என்னால் களம் இறங்கி விளையாட முடியும் என்று சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சுரேஷ் ரெய்னா கூறுகையில் "என்னால் இந்திய அணிக்காக 4-வது இடத்தில் களம் இறங்கி விளையாட முடியும். அந்த இடத்தில் நான் ஏற்கனவே களம் இறங்கி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறேன். அடுத்த வருடம் நடைபெற இருக்கும் இருபதுக்கு-20 உலகக்கோப்பை தொடரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். (ம)

### ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின்

# பயிற்சியாளராக குளுஸ்னர் நியமனம்




ஆப்கானிஸ்தான் கிரிக் கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் ஆல்-ரவுண்டர் குளுஸ்னர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் கிரிக் கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்தவர் பில் சிம்மன்ஸ். அவரது பதவிக் காலம் முடிவடைந்ததையொட்டி, புதிய பயிற்சியாளர் பதவிக்கு விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் போர்டு சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

50-க்கும் மேற்பட்டோர் விருப்பம் தெரிவித்திருந்தனர். அதில் தென்னாபிரிக்கா அணியின் தலைசிறந்த ஆல்-ரவுண்டராக விளங்கிய குளுஸ்னரை தேர்வு செய்து தலைமை பயிற்சியாளராக நியமித்துள்ளது ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் போர்டு. (ம)

### கரீபியன் பிரிமியர் கிரிக்கெட்

# 15 பந்தில் அரைச்சதம் கடந்து டுமினி சாதனை



கரீபியன் பிரிமியர் லீக்கில் பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணிக்காக விளையாடி வரும் டுமினி 20 பந்தில் 65 ஓட்டங்கள் குவித்தார்.

கரீபியன் பிரிமீயர் லீக் இருபதுக்கு 20-யில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பார்படோஸ் டிரிடென்ட்ஸ் - டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. பார்படோஸ் டிரிடென்ட்ஸ் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அந்த அணியின் சார்லஸ் - கார்ட்டர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். சார்லஸ் 58 ரன்களும், கார்ட்டர் 51 ரன்களும் சேர்த்தனர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 13.5 ஓவரில் 110 ரன்கள் குவித்தது. அடுத்து வந்த டுமினி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 15 பந்தில் 2 பவுண்டரி, 6 சிக்சர்களுடன் அரைச்சதம் அடித்தார். இதன்மூலம் கரீபியன் பிரிமீயர் லீக்கில் விரைவாக சதம் அடித்த பட்ஸ்மன் என்ற பெருமையை பெற்றார்.

தொடர்ந்து விளையாடிய அவர் 20 பந்தில் 4 பவுண்டரி, 7 சிக்சருடன் 65 ரன்கள் குவித்தார். இவரது அதிரடி ஆட்டத்தால் பார்படோஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 192 ரன்கள் குவித்தது.


பின்னர் 193 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் 129 ரன்னில் சுருண்டது. வால்ஷ் 4 ஓவரில் 19 ரன்கள் மட்டும் விட்டுக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்கள் கைப்பற்றினார். (ம)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு

யாழ்.மட்டுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் சுவிஸ் Bern நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட எமது பாசமிகு தாயார்

## அமரர். செல்லையா செல்லாச்சி

தோற்றம் 28 . 08 . 1938



மறைவு 29 . 08 . 2019

கடந்த 29.08.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு செல்லையா - செல்லாச்சி அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று சனிக்கிழமை சுவிஸ் நாட்டிலும் யாழ்.மட்டுவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சுவிஸ் நாட்டிலுள்ள Tell Ostermundigen Bernstrasse 101, 3072 Ostermundigen எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்திலும் யாழ்ப்பாணம் மட்டுவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்திலும் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

Tell Ostermundigen
Bernstrasse 101, 3072
Ostermundigen,
Bern Swissland.

தகவல் : குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: அருன்-0041 786 660 535
லலிதா- 0049 791 956 6232, பாபு - 0041 786 381 002
மோகன் - 0044 740 555 5235,
வாணி - 0041 319 311 339, 076 469 1792

(அ-7719)

## நவராத்திரி விழா நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சன சமூக நிலையத்தில் நவராத்திரி விழா நாளை 29 ஆம் திகதி முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறும்.

நவராத்திரி நாட்களில் இரவு 7 மணிமுதல் பூஜை வழிபாடுகள் இடம்பெறும்.

வாணிவிழா மேடை நிகழ்வுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணி முதல் இடம் பெறவுள்ளது. இவ் விழாவை முன் னிட்டு பேச்சுப் போட்டி, பண் ணிசைப் •போட்டி, சைவசமய வினாவிடைப் போட்டி, கோலம் போடு தல் என்பன இடம்பெறவுள் ளன. மேடை நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் கி.செல்வமோகன், அ.ஆலசுந்தரம், அ.யூட், அ.ஆதவன் ஆகியோருடன் தொடர்பு கொள்ளவும்.

விசேட நிகழ்வாக கரவெட்டி கலைஞர்கள் இணைந்து வழங்கும் "கரவை கானங்கள் இசை நிகழ்ச்சி இடம் பெறவுள்ளது. (இ-5)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். பாமதி அமிர்தகுமார்

(ஆசிரியை, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13.09.1970 | 28.09.2014 |




பொன் நகைச் சிரிப்புடன்
இப் பூவுலகில் வலம்
வந்தவளே
அழகு மொழி தமிழினை
அன்புடன்
எடுத்துரைத்தவளே
பாசக் கயிற்றால்
கட்டியணைத்த எம்மை
பாதி வழியில் விட்டுச்
சென்றதேனம்மா– பாமதியே
ஆண்டுகள் ஐந்தாச்சு
ஆற்றொணாத் துயரமது
வாட்டுதம்மா எம்மை
சாந்தி! சாந்தி! சாந்தி!

(442)

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

உம் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## திரு.செல்லத்துரை நடேசபிள்ளை

(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகன் ஆலய தர்மகர்த்தாவும் மட்டக்களப்பு ஈஸ்வரி சினிமா தியேட்டர், செங்கலடி ஸ்ரீமுருகன் தங்கநகை, யாழ்ப்பாணம் தங்க முருகன் நகை முன்னாள் உரிமையாளரும்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.03.1936 | 26.09.2019 |

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் 130, இராசாவின் தோட்டம், நல்லூரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு.செல்லத்துரை நடேசபிள்ளை அவர்கள் 26.09.2019 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (உடையார்) சொர்ணம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கையக்கரசி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தவவிநாயகம் (விதானையார்), தையல் நாயகி, வேலாயுதப்பிள்ளை, சிவயோகலக்ஷ்மி, நடேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், கஜந்தினி (லண்டன்), சுதாஜினி (பிரான்ஸ்), துஷ்யந்தன் (பிரான்ஸ்), கஜநேசன் (லண்டன்), கமலினி (லண்டன்), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாகர், சிவகுமார், சங்கீதா, சியாமலா, விஜயானந் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணாம்பாள், காலஞ்சென்ற ஞானசம்பந்தர் மற்றும் இராசம்மா, காலஞ்சென்ற இரத்தினசபாபதி (தபால் அதிபர், அல்லைப்பிட்டி), சச்சிதானந்தம், கந்தையா (சிறாப்பர், வேலணை), செல்வ லக்ஷ்மி மற்றும் புவனேஸ்வரி, சுயம்புலிங்கம், திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராமநாதன் மற்றும் சீவரட்ணம், ஜெயசிறி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகலனும், நேத்திரா, கஜீஸ், வைஷ்ணவன், தாரிக்கா, தர்சனா, கர்சினி, சபரிகரிஸ், சாம்பவி, வர்ஷன், யஸ்விக்கா, சங்கீத் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 26.09.2019 வியாழக்கிழமையில் இருந்து 28.09.2019 இன்று சனிக்கிழமை வரை 130, இராசாவின் தோட்டம், நல்லூர் எனும் முகவரியில் வைக்கப்பட்டு 29.09.2019 நாளை ஞாயிற்றுக்கிழமை அல்லைப்பிட்டி 2ம் வட்டாரம், அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(427)

இராசாவின் தோட்டம்,
நல்லூர்.

தொடர்புகளுக்கு: 077 634 2489, 021 222 5921,
077 134 5980

தகவல்:
குடும்பத்தினர்.

# தியாக தீபம் திலீபனுக்கு யாழ். பல்கலையில் நினைவேந்தல்




(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்.பல்கலையில் நேற்று முன்தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வின் ஆரம்பத்தில் "உயிர்க்கொடை அளித்தவர் நினைவாய் அளித்திடுவோம் குருதிக்கொடை" என்ற வாசகத்துடன் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு அதிகளவான மாணவர்கள் குருதிக்கொடை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து பல்கலை வளாகத்தில் அமைந்துள்ள திலீபனின் உருவப்படத்துக்கு சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. திலீபன் நினைவுகள் விருட்சமாக வேண்டும் என்ற நோக்கில் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (இ-9)

## பௌத்த பிக்குகளின் அடாவடிக்கு எதிராக கண்டனத் தீர்மானம்

(சாவகச்சேரி)

புத்த பிக்குவின் உடல் பிள்ளையார் கோவிலின் வளாகத்தில் எரியூட்டப்பட்டமை சட்டத்தரணி சுகாஸ் மற்றும் பொது மக்கள் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் பிரேரணை சமர்ப்பித்தார்.

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் ஆக்கிர மித்து அமைக்கப்பட்டிருந்த பௌத்த விகாரையின் பிக்கு உயிரிழந்த நிலையில் அவரது உடலை பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் தகனம் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினரால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.

எனினும் நீதிமன்ற உத்தரவை மீறி ஆலயத்தின் தீர்த்தக் கேணிக்கு அருகில் பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

ஞானசாரதேரர் தலைமையிலான சிங்கள-பௌத்த சமூகத்தை சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப் படுத்த வேண்டிய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு முன்னிலையில் நீதி மன்றின் உத்தரவை மீறி பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணிப் பகுதியில் தகனம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களது செயலைத் தடுப்பதற்கு குறித்த பொலிஸ் அதிகாரி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக நீதிமன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி தகனம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்த தமிழ் மக்களை குறித்த பொலிஸ் அதிகாரியும் பொலிஸாரும் இணைந்து அச்சுறுத்திய துடன் பிக்குகளின் அடாவடித்தனமான செயற்பாட்டிற்கும் உறுதுணையாகச் செயற்பட்டிருந்தனர்.

நீதிமன்ற உத்தரவை மீறி பிக்குவின் உடலைத் தகனம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான நடவடிக்கையை தடுத்து நிறுத்து வதற்கு அங்கு திரண்டிருந்த தமிழ் மக்களுடன் இணைந்து சட்டத் தரணிகள் முயன்றபோது சட்டத்தரணி சுகாஸ் உட்பட நான்கு பேர் பிக்கு களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

இவ்வாறான செயலைப் பார்க்கும் போது ஒரு நாட்டின் நீதித் துறையின் சட்டங்களை மதிக்காது அடாவடி செய்பவர்கள் தர்மத்தை போதிப்பவர்கள் சட்ட திட்டங்களை மதித்துச் செயற்படுபவர்கள்தான் பயங்கரவாதிகள். அவர்கள் மீது தான் இன, மத முரண்பாட்டைத் தூண்டுகின்றனர் என்று பயங்கரவாதத் தடைச்சட்டம் பாயும்.

இது என்ன நீதி? பிரிவினையைத் தூண்டுபவர்கள் இவர்கள் தானே! பயங்கரவாதிகள் சைவ சமயத்தவர்களின் புனிதத் தலங்களில் ஒன்றான நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணியருகில் எமது சைவ மரபுகளுக்கு முரணான வகையில் பிக்குவின் உடலம் எரிக்கப்பட்டமைக்கும் சட்டத்தரணி சுகாஸ் மற்றும் பொது மக்கள் மூவர் தாக்கப்பட்டமைக்கும் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

இந்தப் பிரேரணை தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சபை ஏற்றுக் கொண்டது. (இ-114)

## தேசிய கல்வியியற் கல்லூரியில் திருக்குறள் நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் தமிழ் மன்றமும் வடக்கு மாகாண கலாசார திணைக்களமும் இணைந்து நடத்தும் "மரபு பேணுவோம்" என்னும் தொனிப் பொருளில் "திருக்குறள் நூல் அறிமுக விழா" எதிர்வரும் 03 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியளவில் பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கலாசாரத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

அத்துடன் வடமாகாண கலாசாரத் திணைக்களத்தால் பதிப்பித்து வெளியிடப்பட்ட திருக்குறள், திருக்குறள் ஆய்வுநூல், முப்பாநூற்சுருக்கம், திருக்குறள் ஆய்வுக் கையேடு, பேர்சிவல் பாதிரியாரால் தொகுக்கப்பட்ட தமிழ்ப்பழமொழிகள் ஆகிய நூல்கள் ஆசிரிய மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. (இ-5)

யாழ்.செய்திகள்

## திவ்ய பிரமோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதி ஈழத்து சீரடி சாயிநாதனின் திரியோதச வருட திவ்ய பிரமோற்சவப் பெருவிழா எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும்இடம் பெறவுள்ளன. (இ-5)



## வித்துவான் வேந்தனாரின் நூற்றாண்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழ்ப்பேரறிஞர் வித்துவான் வேந்தனாரின் நூற்றாண்டு விழா இன்று நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில், மாலை 4மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெறும்.

வித்துவான் வேந்தனார் ஈழத் தமிழ் இலக்கியவுலகில் , 1940 - 1966 ஆண்டுக் காலப் பகுதியில், முன்னணி இலக்கியவாதியாக விளங்கியவர்.

தலைசிறந்த குழந்தைப்பாடலாசிரியர், தனிச் சிறப்புமிக்க பாடநூல் உரையாசிரியர், கவிஞர், கட்டுரையாசிரியர், சித்தாந்த தத்துவங்களை நன்கறிந்த சித்தாந்த சிரோமணி, பெயர் பெற்ற மேடைப் பேச்சாளர், போற்றுதலிற்குரிய தமிழாசான் , தமிழின உரிமைக்காக 1942 ஆம் ஆண்டிலிருந்து - 1966ஆம் ஆண்டு அவர் இறக்கும்வரை , கவிதை - கட்டுரை- சொற்பொழிவு என்பவற்றால், குரல் கொடுத்த தமிழ்ப் பேரன்பர் எனப் பல கோணங்களில் நினைவுகூரப்பட வேண்டியவர் வித்துவான் வேந்தனார் ஆவார். (இ-7)

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளான நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சாவகச்சேரி பிரதேச சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. சபையின் மாதாந்த அமர்வின் போதே தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:-சுபேசன்)



## PHARMACIST (EXTERNAL) EXAMINATION NOVEMBER-2019

இவ்வாண்டுக்குரிய மருந்தியலாளர் (வெளிவாரி) பரீட்சை கார்த்திகை மாதம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் சனி/ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதியில் நடைபெற்று வருகிறது.

மீட்டல் வகுப்புகள் **(Paper Classes)** 30.09.2019 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. **New Batch "CERTIFICATE IN PHARMACY"** ஆறுமாத பயிற்சி வகுப்புக்கள் **November/2019-April/2020** வரை நடாத்தப்படவுள்ளது.

**மேலதிக தகவல்கள்: நேரு SIR 077 316 4251** (436)


# ஜனாதிபதி வேட்பாளராக சஜித் ஐ.தே.க.ஆதரவாளர்கள் ஆரவாரம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சரும் பிரதித் தலைவருமான சஜித் பிரேமதாஸ அறிவிக்கப்பட்ட நிலையில் கட்சியின் ஆதரவாளர்கள் பலர் சிறிகொத்தா பிரதேசத்தில் ஆரவார கொண்டாட்டத்திலும் பட்டாசு கொளுத்தி, பதாகைகளை ஏந்திய வண்ணம் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டு கூட்டுக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் பொது வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சி களமிறக்கியது.

இதில் 2010 ஆம் ஆண்டு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் 2015 ஆம் ஆண்டு அப்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும் களமிறங்கினர்.

இந்நிலையில் இம்முறைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளராக அமைச்சர் சஜித்தை களமிறக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முழுமையான ஒத்துழைப்பும் ஐக்கிய தேசிய முன்னணி பங்காளிக் கட்சிகளின் ஆதரவும் கிடைத்துள்ள நிலையில் அவருக்கான முழுமையான ஒத்துழைப்புடன் அவர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குகின்றார்.

இதேவேளை நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும் (C-7705)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**றொங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



**NOTICE**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**
**WALK-IN-INTERVIEW**

POST OF TECHNICAL ASSISTANT (FULL TIME)- ON CONTRACT BASIS - 01 VACANCY
POST OF PROJECT ASSISTANT (FULL TIME)- ON CONTRACT BASIS - 02 VACANCIES

Walk in Interview for the above positions - On Contract Basis will be held on 04.10.2019 from 9.00 AM to 11.00 AM, at the Mini Board Room, Administration block of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared application in the prescribed format available in the University website along with relevant original certificates on the date and the time mentioned above.

❖ For further details please refer the University of Jaffna website www.jfn.ac.lk.

Registrar

(C-7721)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா:41
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L நகைத் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடும ட்டும்
தொ.இ: B10079

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா:36
உயரம்: 170 cm
தகைமை/தொழில்: A/L பிரான்ஸ்
தொ.இ: B/10081

பிறப்பு: 1991 இந்து
கி.பா:8 ½
உயரம்:170 cm
தகைமை/தொழில்: A/L சுவிஸ்
எதிர்பார்ப்பு:- PR உள்ளவெளிநாட்டுபெண்
தொ.இ: B/10082

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்: 5'9"
தகைமை/தொழில் A/Lசெயற்பாட்டு நிர்வாகி
தொ.இ: B/10083

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 4 இல் செவ்.
உயரம்:172 cm
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: G/10101

பிறப்பு: 1993 இந்து
உயரம்: 5'5"
நட்சத்திரம்: ரேவதி
கி.பா:39 ¼8 இல் செவ்.
தகைமை/தொழில்:A/Lவங்கிகணக்காளர் சீமாமுடித்தவர்
எதிர்பார்ப்பு: என்ஜினியர்
தொ.இ: G/10103

பிறப்பு: 1981இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ்.7 இல்
உயரம்: 120 cm
தகைமை/தொழில்: கிராம அபிவிருத்தி திணைக்களம் தையல் போதனாசிரியர் (பிரதேசசெயலகம்)
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: G/10107

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா:122 இல் செவ்.
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/Lவங்கியாளர்
எதிர்பார்ப்பு: என்ஜினியர், டாக்டர் , கணக்காளர்
தொ.இ: G/10111

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



**உயர்திரு.சிதம்பரப்பிள்ளை தில்லைநாதன்**

உதவிக்கல்விப்பணிப்பாளர்,
(ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு, வடமராட்சி கல்வி வலயம்)

Congratulations

**இசைமழை வாழ்த்து**

முன்பள்ளிக் கல்வியிலே முழு மூச்சாய் உனை இணைத்து
பல்துறைக் கலைஞனாய்ப் பலரையும் வியக்க வைத்தாய்
சத்தியத்தில் வழியினிலே தளராத உன்சேவை
சத்தியமாய்த் தரணியிலே நிலைத்திருக்க வாழ்த்துகின்றோம்

மணிவிழா நாயகனை வாழ்த்துவதுடன் அவரும்
அவரின் குடும்பத்தாரும் சகல சௌபாக்கியங்களும்
பெற்று சீரும் சிறப்புமாக வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: ஆரம்பக்கல்வி நண்பர்கள் வட்டம்

(C-7720)

# சஜித்தின் தந்தை வழி பலருக்குத் தெரியும் தமிழில் ஒருவிதம் சிங்களத்தில் மறுவிதம்



## யாழில் குமார் குணரட்ணம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் சஜித் பிரேமதாஸ அடிக்கடி கூறும் தந்தை வழியில் நானும் என்ற வாசகத்தின் பிற்பகுதியை அக்கால கட்டத்தில் இருந்த பலரும் அறிந்திருப்பார்கள் என முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் தெரிவித்தார்.

யாழ்.பொது நூலக உணவு விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள அமைச்சர் சஜித் பிரேமதாஸ அடிக்கடி கூறும் தந்தை வழியில் நானும் செல்வேன் எனக் கூறுவது தந்தையின் காலத்தில் சகோதர தோழர்கள் 6 ஆயிரம் பேர் கொல்லப்பட்டமையை ஞாபகப்படுத்துகின்றது.

அமைச்சர் சஜித் அரசியல் தீர்வு விடயத்தில் எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளார் என்று இதுவரை உத்தரவாதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல் எதுவும் தயாரிக்கப்படவில்லை.

வடக்கிற்கு வரும் போது ஒரு கருத்தையும் தெற்கில் பெரும்பான்மையினரைச் சந்திக்கும் போது இன்னொரு விதமான கருத்தையும் வெளியிடுகிறார்.

இது அரசியல் அதிகாரத்தைப் பெறப் போடும் நாடகமே!

மறு பக்கத்தில் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய அறிவிக்கப்பட்டுள்ளார்.

மகிந்த அணியினர் தமிழர்களின் போராட்டங்களை காரணம் காட்டிச் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி நடத்தியவர்கள்.

இம்முறை நாட்டில் இடம்பெற்ற முஸ்லிம் தீவிரவாதத் தாக்குதலைக் காரணம் காட்டி சிங்கள மக்களிடம் வாக்குகளைக் கேட்கப் போகிறார்கள்.

இவ்வாறு தத்தமது அரசியல் கட்சிகளின் அதிகாரப் போட்டிக்கும் பதவி மோகத்திற்கும் இலங்கை மக்களை வேறுபடுத்தி அரசியல் இலாபங்களை அடைய முற்படுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பிலான சர்ச்சை கடந்த இரு மாதங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டது.

நாட்டில் பொருட்களின் விலையேற்றத்தால் சாதாரண மக்களின் அன்றாடப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தாமல் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மாறி மாறி இடம்பெற்றமை யாவரும் அறிந்ததே.

எனவே அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒன்றிணைந்த ஆட்சி அதிகாரமே ஜனநாயகத்தைப் பெற்றுக் கொடுக்கும் எனகுமார் குணரட்ணம் மேலும் தெரிவித்தார். (இ-10)

## வழக்குத் தொடர அதிகாரம் உள்ளதா?

# காற்றாலை தொடர்பாக ஆராய பிரதேச சபையில் விசேட குழு தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன்புலவு பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக ஆராய பிரதேசசபை உறுப்பினர்கள் எழுவர் அடங்கிய விசேட ஆலோசனை மற்றும் வழிகாட்டல் குழு ஒன்றை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் அமைத்தார். சாவகச்சேரி பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே குறித்த குழு தெரிவு செய்யப்பட்டது.

சட்டத்தரணி சதீஸ்வரன் தலைமையிலான குறித்த குழு காற்றாலை நிறுவனம் மீது வழக்குத் தொடர பிரதேசசபைக்கு அதிகாரம் உள்ளதா?

வழக்குத் தொடர்ந்தால் இவ்விடயத்தை எவ்வாறு அணுக வேண்டும் உள்ளிட்ட விடயங்களை ஆராய்ந்து, சட்ட மற்றும் உள்ளூராட்சித் திணைக்களங்களுடன் கலந்தாலோசித்து 15 நாட்களுக்குள் தீர்க்கமான முடிவினை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆலோசனைக் குழு அமைத்த பின்னர் பிரதேச சபைத் தவிசாளர் கருத்து தெரிவிக்கையில்,

நாம் எதனையும் ஒன்றுக்கு பல தடவை சிந்தித்து செயலாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம். காரணம் குறித்த காற்றாலை மின்சார சபையின் தேசிய திட்டம் எனக் கூறப்படுகிறது. சபை உறுப்பினர்கள் காற்றாலை நிறுவனம் மீது வழக்குத் தொடர வேண்டும் என அழுத்தம் கொடுக்கின்றனர் என்பதால் வழக்கைத் தொடர்ந்து விட்டு பின்னர் அதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குப் பிரதேச சபையால் முகம் கொடுக்க முடியாது. நான் மக்களின் உணர்வுகளை மதிக்கின்றேன். மக்கள் குடிமனைகளுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வருகின்ற நான்கு காற்றாலைக் கோபுரங்களையும் அகற்ற வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். பல கூட்டங்களிலும் நான் இதனை வலியுறுத்தியிருக்கிறேன்.

மக்கள் குடியிருப்பு பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி அமைக்கப்படுகின்ற காற்றாலைக் கோபுரங்கள் தொடர்பாக குறித்த ஒப்பந்த நிறுவனம் மீது வழக்குத் தொடர எமக்கு சட்ட ஆலோசனை தேவைப்படுகிறது.

எனவே தான் சட்டத்தரணி தலைமையிலான குறித்த குழுவினை நியமித்து பதினைந்து நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க பணித்துள்ளேன் என தவிசாளர் க.வாமதேவன் மேலும் தெரிவித்தார்.

தென்மராட்சி-மறவன்புலவு பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்ற காற்றாலை விவகாரம் தற்போது பூதாகரமாக வெடித்து வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

# இராவணா 1 செய்மதியை தயாரித்த விஞ்ஞானி இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

இராவணா 1 செய்மதியை தயாரித்து ஏவிய இலங்கை விஞ்ஞானி நேற்று முன்தினம் இரவு கொங்கோ நாட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தார்.

தரிது தயாரட்ன என்ற விஞ்ஞானியே கொங்கோவிலிருந்து கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தடைந்தார்.

இந்நிலையில் ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்விகள் எழுப்பிய போது நிறுவனத்தின் அனுமதியின்றி பதிலளிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

இருப்பினும் ஆர்தர் சீ.கிளாக் மையத்தின் செயற்றிட்டத்திற்கு அமைவாகவே நான் இலங்கைக்காக விண்கலத்தை தயாரித்தேன் என தெரிவித்தார்.

நாங்கள் தயாரித்த விண்கலம் பூமியை சுற்றி வருகிறது. நாங்கள் இன்னும் ஐந்து ஆண்டுகளில் விண்கலத்தை உருவாக்கி விண்ணுக்கு அனுப்ப எதிர்பார்த்துள்ளோம்.

விஞ்ஞானி தரிது தயாரட்னவை வரவேற்பதற்காக தாய், சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள்,நண்பர்கள் மற்றும் அவர் கல்வி கற்ற பாடசாலையின் அதிபர், மாணவர்கள் சங்கம் ஆகியோர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம்



(கொழும்பு)

2015 ஜனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் 2018 டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் கண்டறிவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல், மோசடிகள், நம்பிக்கை மோசடி, அரச உடைமைகளைத் தவறாகக் கையாளுதல், மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம், அரச வளங்கள் மற்றும் வரப்பிரசாதங்களைத் தவறான முறையில் பயன்படுத்துதல் போன்ற பிழையான நடவடிக்கைகளின் விளைவாக அரசாங்க சொத்துக்களுக்கும், வருமானத்திற்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தியமை தொடர்பாக அரசியல் பதவிகளை வகித்தவர்கள், இதுவரை பதவி வகித்து வருபவர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் நியாயாதிக்க சபைகளின் அதிகாரிகளாகக் கடமையாற்றிய மற்றும் சேவையில் இருக்கும் நபர்களுக்கு எதிரான பாரிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மக்களால் அளிக்கப்பட்ட புகார்கள், தகவல்கள் மற்றும் ஏனைய விடயங்களை கருத்திற்கொண்டு பக்கச்சார்பற்ற விரிவான விசாரணை ஒன்றை மேற்கொள்வது இந்த ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன கடமை புரிவதுடன், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சரோஜினி குசலா வீரவர்த்தன, ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகம் பஸ்துன் கோரலே ஆராச்சிகே பேமதிலக, ஓய்வுபெற்ற அமைச்சரவை செயலாளர் லலித் ஆர்.டி.சில்வா, ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.கே.டி.விஜேய அமரசிங்க ஆகியோரும் இக்குழுவில் அங்கத்துவம் வகித்தனர்.

ஜனாதிபதியால் 2019 ஜனவரி 17 ஆம் திகதி இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–186

# இளையோருக்கு காலநிலை மற்றும் பல்வகைமை திறன்கள் பற்றிய உலகளாவிய பயிற்சி



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 199

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இளையவர்கள் தான் வருங்காலத்தின் சிற்பிகள்!. இவ்வாறான சிற்பிகளை வடித்தெடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இன்னும் இவர்கள் சார்ந்த சமூகத்திற்கும் மற்றும் நாடளாவிய இன்னும் உலகளாவிய நிறுவனங்களையும் சாரும். இது வெறுமனே கதைக்காக சொல்லப்பட்டதல்ல. மாறாக நாம் அனைவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டியதற்காக எழுதப்பட்டிருக்கின்றது. நாம் வாழும் சமூகத்திலுள்ளவர்கள் ஏனோ தானோ என்றில்லாமல் இளைய சமூகத்தை நல்வழியில் திசையிட்டு வளப்படுத்திச் செல்வது அவர்கள் வாழும் ஊருக்கும், பிரதேசத்திற்கும் இன்னும் நாட்டுக்கும் நற்பெயரையும் சிறந்த அபிவிருத்தியையும் இட்டுச் செல்லும்.

இவ்வாறான இளைய சமூகத்தை நம்பியே ஐக்கிய நாடுகள் தாபனமும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 17 இனை உருவாக்கி அவற்றிற்கான செயற்றிட்டங்களையும் செதுக்கி அதனுடன் நின்றுவிடாது அவற்றை கண்காணிப்பதற்கான பொறிமுறையையும் உருவாக்கியிருக்கின்றார்கள். 2030 ஆம் ஆண்டினை இலக்காக வைத்து பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் தீட்டப்பட்டுள்ளன. இதற்கிடையில் மேற்படி தீட்டப்பட்ட திட்டங்களின் முன்னேற்றத்தை அவ்வப்போது கண்காணித்து அவற்றுக்கான தீர்வுகளும் உடனடியாக பரிந்துரைக்கப்படுகின்றன. எதிர்பார்த்ததை விட செதுக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல இடர்பாடுகளை சந்தித்த போதிலும் முன்னேற்றம் மெதுவாகத் தான் நடந்தாலும் இலக்கினை நோக்கிய நகர்வு திடமானதாக, காத்திரமானதாக இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இம்முறை யுனெஸ்கோவினால் செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதன் படி உலகளாவிய ரீதியில் இரண்டு இலட்சம் இளையவர்களை காலநிலை மாற்றம் மற்றும் பல்வகைமைத் திறன்கள் பற்றி பயிற்றுவிக்க திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இளையோரின் குறிக்கோள்களை ஒன்றிணைத்த யுனெஸ்கோவின் பலமான ஒன்றிணைவு (Strong engagement) அவர்களின் குரலை வெளிக்கொணரவும் அவர்களுடனான சமூக புத்தாக்கம் (Social innovation) மற்றும் அதனாலான மாற்றத்தை உள்வாங்குவதுடன் அவர்களை தங்களுடைய எதிர்காலத்தைத் திட்டமிடக்கூடியவர்களாக மாற்றுவதற்காகவாகும். இதற்காக யுனெஸ்கோவினால் ஒழுங்கு செய்யப்படும் யு.என். காலநிலைக்கான உலகளாவிய கருத்தரங்கில் (UN Global summit) வருடாவருடம் இரண்டு இலட்சம் இளையோரை பயிற்றுவிப்பதற்காகவும் அவர்களது திறன் விருத்தியை மேற்கொள்வதன் மூலம் இவ்வாறான பயிற்சியை இரண்டு மில்லியன் இளையோரை பயிற்றுவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் தாபனம் திட்டமிட்டு அதனை 2030 ஆம் ஆண்டளவில் முற்றுப்பெறும்.




மேற்படி திட்டமிட்டதன்படி உலகளாவிய ரீதியில் யுனெஸ்கோவினால் நடைமுறைப்படுத்தப்படும் காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வினை செய்வதற்காக இந்த காலநிலைக்கான மாற்றம் பற்றிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 50 இளையோரை மேலும் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் இளையவருக்கான தலைமைத்துவப் பயிற்சிக்கு 1200 உலகத்தின் சிறந்த பாரம்பரிய மையங்கள்ஈ 701 உயிர்த்தொகுதி மையங்கள், இவற்றுடன் 140 யுனெஸ்கோ உலகளாவிய கலாசார மையங்கள் என்பன தெரிவு செய்யப்பட்டு அவற்றை பயிற்சிக் கூடங்களாக 70 மில்லியன் இளையோருக்கு மாற்றியமைத்திருக்கின்றார்கள். இதன் மூலம் இளையவர்களின் அறிவுக்கேற்றவாறு கருவிகளை உருவாக்கி காலநிலை மாற்றத்தை மேலும் கற்பதற்கான தளமாக பயன்படுத்துகிறார்கள்.

இவ்வாறான கற்கை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டால் இளையோரை காலநிலை மாற்றத்தினை வெற்றிகொள்ளும் திட்டத்தினுள் உள்வாங்கிவிடலாம். இதற்காக "விஞ்ஞானத்தின் பின்னால் இணைவோம்" (Unite behind science) என்னும் கருப்பொருளை தாங்கி நடக்கவிருக்கும் உலகளாவிய இளையோர் மாநாட்டில் (World youth Forum) விஞ்ஞானிகள், தனியார் தொழிற்றுறையினர், அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளார்கள். இதில் பிளாஸ்ரிக்கினை தடைசெய்வோம் என்னும் தொனிப்பொருளை கருப்பொருளாக்கி உயிர்ப்பல்வகைமைத் தன்மையை பாதுகாப்பதும் அதன்மூலம் முன்னெடுக்கப்படும். இதில் முக்கிய பயனாக கடற்பிரதேசத்தை காத்தல், சுத்தமான, சுகாதாரமான குடிநீரை பாடசாலைகளுக்கும் சந்தைக்கும் மற்றும் மக்கள் சேரும் பொதுவான இடங்களுக்கும் வழங்கல் என்பன முக்கியத்துவப்படுத்தப்பட்டிருக்கின்றன.

காலநிலை மாற்றம் என்பது பற்றி இளையோருக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்கப்பால் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை இளையவர்கள் உணரத் தலைப்படவும் வேண்டும். இதன் தாக்கம் விவசாயத்தில், கால்நடை வளர்ப்பில், இன்னும் மீன்பிடியில் இவற்றுக்கும் மேலாக தனியார் தொழிற்றுறையில் இன்னும் விவசாயஞ் சார் தொழிற்றுறையில் பலமாக உணரலாம் என எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது. பனிக்கட்டிகள் துருவப் பிரதேசங்களில் உருகத்தொடங்கியிருப்பது மட்டுமல்லாது உருகும் நீரின் தாக்கம் கடல்நீரின் மட்ட அதிகரிப்புக்கும் காரணமாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்த தாக்கம் நாடுகளின் பல இடங்களுக்குள் கடல் நீர் உட்புகக் காரணமாக அமையப்போகின்றது. இந்த எச்சரிக்கை முன்பிருந்தே கூறப்பட்டு வந்தாலும் தற்போது எதிர்பார்த்ததை விட விரைவாக நடைபெறுவதாக அறியக்கிடைக்கின்றது.

காலநிலை மாற்றம் உணவுப் பாதுகாப்பிற்கும் (Food security) பஞ்சத்தை இல்லாதொழிப்பதற்கும் (Eradicate hunger) அதன் மூலம் பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்கும் தடையாக இருப்பதாகவும் இவற்றினை நாம் எதிர்த்து வேலைத்திட்டங்களை செய்வதற்கு தடையாகவும் இருப்பதாக உலக உணவு தாபனமும் சுட்டிக்காட்டியிருக்கின்றது. மனிதனுடைய தலையீட்டினாலான பச்சைவீட்டு வாயுக்களின் தாக்கம் மற்றும் கால்நடை வளர்ப்பிலிருந்து வெளியிடப்படும் இவ்வாறான வாயுக்களால் காலநிலை மாற்றம் அதிகரிப்பது இதற்கொரு முக்கிய காரணமாக கூறப்படுகின்றது. இதனால் புவிமேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பதுடன் பூகோள வெப்பமாதல் ஏற்படுகின்றமை அனைவரும் அறிந்ததே. இவற்றின் விளைவுகளைப் பற்றி இளையவர்களின் அறிவினை விருத்தி செய்து அவர்களிடமிருந்து புதிய மாற்று வழிகளைப் பெற்று தீர்வு காண்பதும் இதற்குள்ளாக அடங்கியிருக்கும் விடயமாக கருதலாம்.

காலநிலை மாற்றத்தினால் விவசாய உற்பத்தியில் விழுக்காடு ஏற்படுவதுடன் மழை வீழ்ச்சியில் மாற்றங்கள், வரட்சி, வெள்ளப்பெருக்கு இன்னும் பீடை மற்றும் நோய்த் தாக்கத்தின் பரம்பல் என்பன ஏற்படுகின்றன. கடற்பரப்பினால் அகத்துறிஞ்சப்படும் அதிகளவிலான காபனீரொட்சைட்டு காரணமாக அமிலமாதல் என்பன நேரடியாகவே மற்றும் மறைமுகமாக மக்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தி விடுகின்றது. இந்நிலையில் உலக உணவு தாபனத்தினால் உருவாக்கப்பட்ட திட்டங்களினூடாக காலநிலை மாற்றத்தின் தாக்கத்தினை குறைப்பதற்கும் இன்னும் இல்லாதொழிப்பதற்கும் அனைவரும் ஒன்று சேரவேண்டும். இதற்கு அவரவருக்கு இது பற்றிய அடிப்படை அறிவும் இருத்தல் வேண்டும்.

இதனை மையப்படுத்தியே இளையவர்களுக்கு காலநிலை மாற்றம் மற்றும் அதனால் ஏற்படும் பல்வகைத் தன்மையின் பாதிப்பு என்பன அறியப்படல் வேண்டும்.

இது ஒரு கூட்டு முயற்சி என்பதனை அனைவரும் உணர்ந்து கொண்டால் தான் இந்த இடரிலிருந்து விடுபட வாய்ப்புக்கள் உண்டு.


# சட்ட ஆட்சியை நிலைநாட்டி சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாக்கக்கோரி போராட்டம்

## ஐ.நா.ஆணையாளருக்கு மகஜர் அனுப்பி வைப்பு



மன்னார்


கிளிநொச்சி



முல்லைத்தீவு








வவுனியா

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப்பிள்ளை யார் ஆலய வளாகத்தில் நீதிமன்ற தீர்ப்பை அவமதித்து பிக்குவின் உடல் எரிக்கப்பட்டமை மற்றும் குறித்த சம்பவத்தின் போது சட்டத்தரணிகள் மற்றும் பொதுமக்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் சட்ட நடவடிக்கை எடுக்க கோரியும் நேற்று வடக்கில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்த வகையில் வடக்கு- கிழக்கு சிவில் அமைப்பின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றல், வவுனியா பழைய பேருந்து நிலையம், கிளிநொச்சி ஏ9 வீதியில் உள்ள பழைய மாவட்டச்செயலகத்தில் கண்டன போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் மன்னார் மாவட்ட சமூக மேம்பாட்டிற்கான அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டச் செயலக முன்றலிலும் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. தொடர்ச்சியாக சிறுபான்மை இன மக்கள் பெரும்பான்மை இன மக்களால் அடக்குமுறைகளுக்குள்ளாவதாகவும் நீதித்துறையின் நீதியை கடைப்பிடிக்கத் தவறியவர்களை தண்டிப் பதற்கு ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்தை பணிக்குமாறு கோரி குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தின் இறுதியில் ஐக்கிம் நாடுகள் சபையின் செயலாளருக்கான மகஜரை அந்தந்த மாவட்டங்களிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்தில் கையளித்தனர். (9,281.285,299)

# வாழ்வதற்கான உரிமை சட்டமாக்கப்பட வேண்டும்

## வடக்கில் போராட்டம் முன்னெடுப்பு








(பனிக்கன்குளம்)

உயிர் வாழ்வதற்கான வாழ்வுரிமையை இலங்கை அரசியல் யாப்பில் சட்டமாக்கப்பட வேண்டும் என தெரிவித்து நேற்று கிளிநொச்சி. முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இதே வேளை குறித்த விடயத்தை வெளிப்படுத்தும் வகையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் அனைத்து கோரிக்கையாக அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-281-285)

# முல்லை.மாணவர்களுக்கான பற்சுகாதார செயற்றிட்டம்





(அக்கராயன்)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு கீழ் உள்ள 46 பாடசாலைகளைச் சேர்ந்த தரம் ஒன்று மாணவர்களுக்கான பற்சுகாதார செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலிய மருத்துவ நிதியத்தின் அனுசரணையில் வருடந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் இச்செயற்றிட்டத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது செயற்றிட்டம் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு வலயக் கல்வித்திணைக்களத்தின் தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது 2010 மாணவர்களுக்கான பற்தூரிகைகள் மற்றும் பற்பசைகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் பற்சுகாதாரத்தை பேணும் வகையில் கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பற்சுகாதார செயற்றிடத்தின் இவ் வருடத்திற்கான மூன்றாவது கட்டம் இதுவாகும். தரம் ஒன்று மாணவர்களுக்கு பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் பாடசாலைகளில் நடமாடும் பற் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் உத்தியோகத்தர்கள், வலயக் கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.(9-350)




# வலுவற்ற நீதிமன்றங்களை மூடிவிடுங்கள்

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

(மன்னார்)

வட கிழக்கில் சட்டவிரோத விகாரைகள் அமைப்பதும் அதற்கு புதிய வரலாறுகள் கற்பிப்பதும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் செய்வதும் ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலே என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த தேரர்கள் இலங்கை நீதிமன்றத்தின் கட்டளைகளை பின்பற்றமாட்டார்கள் என்றால் தமிழர் தாயகப்பகுதியில் எதற்கு இலங்கையின் நீதிமன்றங்கள் அவற்றை மூடிவிடுங்கள்.

வலுவற்ற வெற்று மன்றங்கள் எதற்கு? அதிகார வலிமையற்ற சாமானிய மக்களை துன்புறுத்துவதற்கு தானா? இந்த நீதிமன்றங்களும் இலங்கையின் சட்டவாக்கமும் அவ்வாறான ஒன்று தமிழர் தாயகத்திற்கு அவசியம் இல்லை. பௌத்தர்களே இலங்கையர்களாக சட்டவாக்கத்தை மதிக்காத போது தமிழ் மக்கள் இலங்கையர்களாக வாழவேண்டும் என்று எதிர்பார்ப்பது வேடிக்கையானது.

இவ்விதமான மேட்டிமை வாதத்தால் சகிப்புத்தன்மை இழந்தே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நேரிட்டதை மறந்துவிட்டீர்களா? யுத்தம் முடிந்து பத்து ஆண்டுகள் ஆகியும் வட கிழக்கை இன்னொரு தேசமாகவே சிங்கள தேசம் பார்க்கின்றது.

தமிழர்களும் உங்களுடன் சேர்ந்து வாழலாம் எனும் மனோநிலையில் இல்லை. கடந்த எழுபது ஆண்டுகளாகவே அடக்கு முறை தொடர்கிறது.

வடகிழக்கில் சட்டவிரோத விகாரைகள் அமைப்பதும் அதற்கு புதிய வரலாறுகள் கற்பிப்பதும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் செய்வதும் ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலே. இது ஒரு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு ஆகும் . இன்றைய பௌத்தம் புத்தரின் தர்மபதக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிரானது ஆகும்.

பௌத்த தேரர்கள் இலங்கையர்கள் இல்லையா? இலங்கையராக இருந்திருந்தால் நீதிமன்றை களங்கப்படுத்தியிருப்பார்களா? அல்லது தமிழ் நீதிபதிகளின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மாட்டார்களா? முல்லைத்தீவில் இலங்கையின் நீதி மன்றம் தானே உள்ளது தமிழீழ நீதிமன்றம் இல்லை தானே!

நல்வழிப்படுத்த வேண்டிய சமயங்கள் மதம் பிடித்து சதிராட்டத்தில் ஈடுபடுகின்றன. தமிழர்கள் எக்காலத்திலும் இலங்கையை விசுவாசிக்க மாட்டார்கள் என்பதை அவ்வப்போது சிங்கள தேசமே உறுதிப்படுத்தி வருகின்றது. எனவே சட்ட மீறலுக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸாரைக் கொண்ட ஒரே நாடு உலகத்தில் இலங்கையே ஆகும்.ஆகவே பௌத்த தேரர்களை தண்டிக்காத நீதிமன்றங்களும் பொலிஸாரும் எதற்கு?தமிழர் தாயகத்திலிருந்து அகற்றி விடுங்கள்.எமக்கு அவசியமில்லை என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது: (9-285)

# புதையல் தோண்ட முற்பட்ட 8 பேர் வவுனியாவில் கைது

(நெளுக்குளம்)

வவுனியவில் நேற்று முன்தினம் இரவு புதையல் தோண்ட முற்பட்ட எட்டுப்பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெளுக்குளம்பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம்தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

வவுனியா நெளுக்குளம் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இராசேந்திரகுளம் பகுதியில் புதையல் தோண்டுவதாக கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி திஸாநாயக்க தலைமையில் சென்ற குழுவினர் இராசேந்திரகுளம் மயானத்திற்கு அண்மித்த பகுதியில் புதையல் தோண்ட தயாராக இருந்த எட்டுப் பேரை கைது செய்துள்ளனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்திய மண்வெட்டிகள், அலவாங்கு, பிக்கான், பூஜைப்பொருட்கள் என்பனவற்றை கைப்பற்றியுள்ளனர். வவுனியா விநாயகபுரம், கண்டி, காலி பகுதிகளைச் சேர்ந்த 27,33,40, 44,57 வயதுடைய நபர்களை கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (9-299-250)



பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வாரிக்குட்டியூரில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கபட்டது. வாரிக்குட்டியூர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கமைய குறித்த நிதி ஒதுக்கப்பட்டு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. (படம்:-நெளுக்குளம் செய்தியாளர்)

# வவுனியா தாதியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

(நெளுக்குளம்)

வவுனியா பொது வைத்திய சாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் கழிக்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்கக் கோரி நேற்று முன்தினம் ஒரு மணிநேர அடையாள வேலை நிறுத்தம் ஒன்றினை மேற்கொண்டனர்.

இது குறித்து அவர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில், புரட்டாதி மாதம் தாதியர்களின் சம்பளமானது கடமை தவிர்ந்த மேலதிக கடமைக்குரிய கொடுப்பனவு எதுவித எழுத்து மூலமான அறிவித்தலும் இன்றி கணக்காளர், கொடுப்பனவுப்பிரிவு உத்தியோகத்தர்களும் இணைந்து தாதியர்களின் கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டுள்ளன. பழைய ஒரு சுற்று நிருபத்தின் அடிப்படையில் இது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

இது குறித்து சரியான விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு கழிக்கப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளை மீளச் செலுத்துமாறு கோரியும் தொடர்ந்து இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமலிருப்பதற்கும் குறித்த போராட்டம் இடம்பெறுகின்றது. இதற்குச் சரியான தீர்வு எட்டப்படாவிட்டால் தொடர்ச்சியாக வடமாகாணம் தழுவிய தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள தாய்ச்சங்கங்களின் அறிவுறுத்தல்களுக்கேற்ப நாம் இணங்கியுள்ளோம்.

இந்நடவடிக்கை மேற்கொண்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)






தியாகி திலீபனின் 32 ஆவது நினைவு தினம் வவுனியா நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கபட்டது. வவுனியா மாவட்ட சமூக ஆர்வலர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திர குமார் கண்ணன், கவிஞர் மாணிக்கம் ஜெகன், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (படம்:-நெளுக்குளம் செய்தியாளர்)

# சிறுநீரக நோய்த்தாக்கத்துக்கு உள்ளாவோர் எண்ணிக்கை முல்லைத்தீவில் அதிகரிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் அதிகளவான மக்கள் தொடர்ந்து சிறுநீரக நோய்ப்பாதிப்புக்கு உள்ளாகி வருவதாக பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் சிறுநீரக நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகி வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நூற்றுக்கும் மேற் பட்ட நோயாளர்கள் மாதாந்த சிகிச்சைகளை மல்லாவி வைத்தியசாலையில் பெற்று வருகின்றனர்.

இதனைவிட அதிகளவானோர் வவுனியா வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு குறித்த பிரதேசங்களில் குடிநீர்ப்பிரச்சினை காரணமாகவே இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதாவது, ஒவ்வொரு கிராமத்திலும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை கிராம மட்ட அமைப்புக்களுக்கு வழங்கி அதன் மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# வவு.வடக்கு பிரதேசசபை உறுப்பினரிடம் விசாரணை

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச சபையைச் சேர்ந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஒருவரை இராணுவ புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் தடுத்து வைத்து விசாரணை செய்துள்ளனர்.

வவுனியா் வடக்கு பிரதேச சபையைச் சேர்ந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் கனகராயன்குளம், குறிசுட்டகுளம் பகுதிக்குச் சென்ற போது அவரைப் பின்தொடர்ந்து சென்ற இரு இராணுவ புலனாய்வார்கள் அவரை மறித்து தடுத்து நிறுத்தியுள்ளனர். பின்னர் மேலும் ஒரு புலனாய்வாளரை வரவழைத்து குறித்த பிரதேசசபை உறுப்பினரிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

திலீபன் நினைவு நாளுக்கு மக்களை திரட்டுகிறீர்களா? என கேட்டு விசாரணை செய்ததுடன், தொலைபேசி இலக்கம் மற்றும் அடையாள அட்டைப் போட்டோ பிரதி என்பவற்றை பெற்று விட்டு விடுவித்துள்ளனர். (9-250)

# 1000 தென்னங்கன்றுகள் வழங்கல்



(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் ஆயிரம் தென்னங்கன்றுகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டுள்ளன. கரைச்சிப்பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தென்னை ஆராய்ச்சி சபையினால் இத்தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. அக்கராயன் கிராம உத்தியோகத்தர் பிரிவில் போரின் போது ஆயிரக்கணக்கில் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டின் பின்னர் வரட்சியான காலங்களில் கிராமத்திற்குள் உட்புகுகின்ற யானைகளினாலும் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் அழிக்கப்பட்ட நிலையில் தென்னை ஆராய்ச்சி சபையினால் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. குறித்த செயற்றிட்டத்தை கிராம உத்தியோகத்தர் ப.சபாரட்ணம் ஒழுங்குபடுத்தி வழங்கியிருந்தார். (9-350)

# நியமனம் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து போராட்டம்





(மன்னார்)

பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதை எதிர்த்து நியமன்ம் பெற்ற உத்தியோகத்தர்கள் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்

இந்த நிலையில் தேர்தலுக்காக குறித்த நியமனம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தால் குறித்த நியமனம் தேர்தல் நிறைவடைந்த பின்னர் வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எங்களுக்கோ அல்லது மாவட்ட செயலகத்துக்கோ எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நியமனத்திற்காக தாங்கள் இரண்டு முறை நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின்னரே தங்களுக்கு இந்த நியமனம் வழங்கிவைக்கப்பட்டுள்ள நிலையில் தங்களுக்கான நியமனம் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே அரசியல் காரணமாகமோ தேர்தல் காரணமாகவோ குறித்த நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் தேர்தல் முடிந்த பின்னர் மீள குறித்த நியமனம் வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்ட பின்னரே தாங்கள் போராட்டத்தை நிறைவு செய்வோம் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (9-285)



தியாகி திலீபனின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் மன்னாரிலுள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் மன்னார் நகரசபை உப தவிசாளர் ஜான்சன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி டெனீஸ்வரன், தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணி உபதலைவர் சட்டத்தரணி டினேஸன், சட்டத்தரணி றொமோள்சன், நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (படங்கள்: மன்னார் செய்தியாளர்)




# போர் அச்சுறுத்தலுடனான இம்ரானின் கருத்தால் போர்க்கப்பலை எல்லையில் நிறுத்திய இந்தியா



(டில்லி)
காஷ்மீர் விவகாரம் போருக்குத்தான் இட்டுச்செல்லும் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ள நிலையில், அரபிக்கடல் பகுதியில் இந்தியா தனது போர்க்கப்பலை தயார் நிலையில் வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் பல்வேறு முறைகளில் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக சர்வதேச சமூகம் தலையிட்டு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என பாகிஸ்தான் வலியுறுத்தியிருந்தது. இருப்பினும் பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைகள் தோல்வியை தழுவவே பயங்கரவாதிகளைக் கொண்டு தாக்குதல்களை நடத்துவதற்கு பாகிஸ்தான் முயற்சிப்பதாக இந்தியா தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றது. இதன் காரணமாக எல்லைப் பகுதியில் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஜ-2)

# காஷ்மீரில் கட்டுப்பாட்டிலுள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

(வோஷிங்டன்)
ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் தளர்த்தி, தடுப்பு காவலில் உள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியது.

ஐ.நா.சபையின் 74 ஆவது கூட்டத்தில் அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை செயலாளர் ஆலிஸ் வெல்ஸ் காஷ்மீர் விவகாரம் குறித்து கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், "ஜம்மு-காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஏராளமானோர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது கவலை தருகிறது.

அம்மாநிலத்தில் அரசியல் நடவடிக்கைகளை இந்திய அரசு ஆரம்பிக்க வேண்டும். ஏற்கனவே உறுதி அளித்தபடி விரைவாக தேர்தல்களை நடத்த வேண்டும்.

ஜம்மு-காஷ்மீரில் கட்டுப்பாடுகளை தளர்த்தி தடுப்புக் காவலில் உள்ளோரை விடுவிக்க வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு வேகமாக மேற்கொள்ள வேண்டும்" என மேலும் வலியுறுத்தினார்.(ஜ-2)

# இனி இந்தியாவின் வரலாற்றை கீழடியில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்

## கீழடி அகழாய்வு குறித்து மு.க.ஸ்ராலின் சுட்டிக்காட்டு

(சென்னை)
இனி இந்திய வரலாற்றை கீழடியிலிருந்து பார்க்க வேண்டும் என்பதை இந்த அகழாய்வு உறுதி செய்துள்ளது என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ராலின் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள கீழடியில் நடைபெற்றுவரும் 5 ஆம் கட்ட அகழாய்வுப் பணிகளை மு.க.ஸ்ராலின் நேற்று வெள்ளிக்கிழமை பார்வையிட்டார்.



இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்தியாவின் வரலாறு மேற்கிலிருந்து தொடங்க வேண்டும் என பலமுறை பல்வேறு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆனால், இந்திய வரலாறு கீழடியில் இருந்து தொடங்க வேண்டும் என்பது கீழடி அகழாய்வால் உறுதி செய்யப்பட்டுள்ளதாக மு.க.ஸ்ராலின் சுட்டிக்காட்டினார்.

மேலும் கீழடி அகழாய்வு மூலம் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் தமிழர்களின் நாகரிகம் எப்படி இருந்தது என்பது உலகிற்குப் பறைசாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழர்களின் கலாசாரம், பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும். தமிழர்களின் கலாசாரத்தை மத்திய அரசு பாதுகாக்க வேண்டும். அதற்கு தமிழக அரசு உரிய அழுத்தம் தர வேண்டும்.

குஜராத், உத்தரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது போல் கீழடியில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டும். இது குறித்து தி.மு.க.வும் மத்திய அரசுக்கு வலியுறுத்தும்" என ஸ்ராலின் தெரிவித்தார். (ஜ-2)

# தங்கச்சுர
# 35 பேர் ப
## மீட்புப் பல

(சாட்)
சாட் நாட்டில் சட்டவிரோதமாக செயற்படுத்தப்பட்டு வந்த தங்கச் சுரங்கம் இடிந்து வீழ்ந்ததில் 35 பேர் உயிரிழந்தனர்.

கொவ்ரி ஃபவ்டி பகுதிகளில் 35 ற்கும் அதிகமானோர் நேற்று முன் தினம் சட்டவிரோதமாக சுரங்கம் அமைத்து தங்கத்தை எடுக்கும் பணியில

இத
மாக சு
இருந்த
விழுந்
ங்கத்தி
டிருந்த
டனர்.

# இந்தோனே
# கட்டட இடி
# 20 பேர் ப

(ஜகார்த்தா)
இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 20 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும் நிலநடுக்கத்தால் வீதிகள், கட்டடங்கள் சேதமடைந்தன.



இந்தோனேசியாவில் நேற்றுக் காலை அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 5.16 மணியளவில் சீரம் பகுதியில் கடுமையான

# சந்திரயான் - 2 கற்றல் அனுபவத்தை இந்திய விஞ்ஞானிகளுக்கு கொடுத்தது




(கொல்கத்தா)
சந்திரயான்-2 திட்டமானது கற்றல் அனுபவத்தை இந்திய விஞ்ஞானிகளுக்கு தந்துள்ளது என அமெரிக்காவின் 'நாசா' சுட்டிக்காட்டியது.

உலகின் எந்தவொரு நாட்டினாலும் இதுவரை ஆராய்ந்து அறியப்படாத நிலவின் தென் துருவப்பகுதிக்கு செல்வதற்காக சந்திரயான்-2 என்ற விண்கல திட்டத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு 'இஸ்ரோ' தீட்டி செயற்படுத்தியது.

கடந்த 7 ஆம் திகதி திட்டமிட்டபடி சந்திரயான்-2 விண்கலத்தின் விக்ரம் லேண்டர், நிலவின் தென்துருவப்பகுதியில் மெல்ல மெல்ல தரை இறங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தரை இறங்க வேண்டிய இடத்தில் இருந்து 2.1 கி.மீ. தொலைவில் இருந்தபோது, விக்ரம் லேண்டரின் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது பேரதிர்ச்சியாக அமைந்தது.

அதைத் தொடர்ந்து விக்ரம் லேண்டர், அதன் 4 கால்களில் நிற்காமல், ஒரே துண்டாக விழுந்து சாய்ந்து கிடந்தது தெரிய வந்தது. அதை சந்திரயான்-2 ஆர்பிட்டர் எடுத்து அனுப்பிய படங்கள் உறுதி செய்தன. அதைத் தொடர்ந்து விக்ரம் லேண்டருடன் தகவல் தொடர்பை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சியில் இஸ்ரோவும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு நாசாவும் ஈடுபட்டன. ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. 14 நாட்கள் ஆன நிலையில் கடந்த 20 ஆம் திகதி அதன் ஆயுளும் முடிந்து விட்டது.

இந் நிலையில் 'நாசா'வின் ஜெட் உந்துவிசை ஆய்வுக்கூட பொறியியலாளர் ஆனி டேவரீஸ், கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க மையத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய போது "சந்திரயான்-2 திட்டத்தை பொறுத்தமட்டில் இந்திய பொறியியலாளர்கள் நன்றாகவே செயற்பட்டனர். ஏராளமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதன் ஆர்பிட்டர் வெற்றிகரமாக செயற்படுகிறது" எனத் தெரிவித்தார்.

விக்ரம் லேண்டருக்கு என்னதான் நேர்ந்தது என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில், "என்ன தவறு நேர்ந்தது என்பதை இஸ்ரோ விஞ்ஞானிகள்தான் கண்டறிய வேண்டும்" என்று சொன்னார். தொடர்ந்து அவர் கூறும்போது, "இது இந்திய விஞ்ஞானிகளுக்கு ஒரு கற்றல் அனுபவம் ஆகும். தோல்வியில் இருந்து நாங்கள் கற்றுக் கொள்கிறோம். அந்த குறிப்பிட்ட நாளில் எனது கணவர் கூட ஜெட் உந்துவிசை ஆய்வுக்கூடத்தில் பணியில் இருந்து விக்ரம் லேண்டரை கண்காணித்து வந்தார். ஆனால் சிறிது நேரம் கழித்து அவர் எனக்கு குறுந்தகவல் ஒன்று அனுப்பினார். அதில் அவர், அதை இனி நான் பார்ப்பேன் என்று நினைக்கவில்லை என குறிப்பிட்டிருந்தார்" என்று தெரிவித்தார். (ஜ-2)

# வெளிநாடு

# ...சுரங்கம் இடிந்து விபத்து; ...ர் பரிதாபமாக உயிரிழப்பு!

## ... பணிகள் தீவிரம்

பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது எதிர்பாராத விதமாக சுரங்கத்தின் மேற்பரப்பில் இருந்த மண் திடீரென இடிந்து விழுந்தது. இந்த விபத்தில் சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த அனைவரும் சிக்கிக் கொண்டனர்.

இந்நிலையில் தகவலறிந்த மீட்புக் குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சம்பவ இடத்திற்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்கச் சுரங்கம் மண் சரிவால் முற்றிலும் மூடப்பட்டிருப்பதால் அதில் சிக்கியுள்ள அனைவரும் உயிரிழந்தனர்.

வடக்கு, மத்திய ஆபிரிக்க நாடான சாட்-இல் லிபிய எல்லை பகுதியான கொவ்ரி ஃபவ்டி நகரில் உள்ள சுரங்கங்களில் தங்கம் இருப்பது கடந்த 2012 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் அப்பகுதியைச் சேர்ந்த சிலர் சட்டவிரோதமாக சுரங்கம் அமைத்து தங்கத்தை எடுத்து வெளிச் சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# எச்.ஐ.வி.வைரஸ் செயற்பாட்டை தடுக்கும் முறை கண்டுபிடிப்பு

எச்.ஐ.வி. பாதித்தவருக்கு அந்த வைரஸ் மேலும் பரவாமல் தடுக்கும் வகையிலான கில் ஸ்விட்ச் என்ற முறைமை அமெரிக்க ஆய்வாளர்களால் கண்டறிப்பட்டது.

பொதுவாக எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள், ஆன்டி ரெட்ரோ வைரல் தெரபி மூலம் நோய்த் தாக்கத்தின் வீரியத்தையும் அது பரவலையும் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

எனினும், அதற்காக மருந்து எடுத்துக் கொள்ளுதலை நிறுத்தியதும் வைரஸ் மிக அதிக வீரியத்துடன் பரவி அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும்.

இந்நிலையில், அமெரிக்க ஆய்வாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு எம்பயோ என்ற மருத்துவ இதழில் வெளியாகியுள்ளது.

இன்க் ஆர்.என்.ஏ. உள்ளிட்ட ஆயிரத்து 100 மூலக்கூறுகளை ஆய்வாளர்கள் இதன்போது ஆய்வு செய்துள்ளனர்.

அவற்றில் சில, எச்.ஐ.வி. போன்ற வைரசை செயற்படத் தூண்டும் அல்லது செயல்பாட்டைத் தடுக்கும் வகையில் செயற்படுவதை கண்டறிந்துள்ளனர். (ஜ-2)

# ...னேசியாவில் தொடர் நிலநடுக்கம்

# ...இடிபாடுகளுக்குள் சிக்கி ...ர் பலி;50 பேர் படுகாயம்



நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 6.5 ஆக பதிவாகி இருந்தது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

அதன்பின்னர், காலை 6.46 மணியளவில் கிழக்குப் பகுதியில் உள்ள மலுகு மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6.8 ஆக பதிவானது என வானிலை மற்றும் புவிசார் ஆராய்ச்சி மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 20 பேர் பரிதாபமாக பலியாகினர்.

மேலும், 50 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஜ-2)

# ஒப்பந்தம் முழுமையாக செயற்படுத்தப்பட்டாலே பேச்சுவார்த்தை சாத்தியம்-ஈரான் ஜனாதிபதி

(டெஹ்ரான்)

ஈரான் தனது 2015 அணுசக்தி ஒப்பந்தத்தை ஆறு சக்திகளுடன் வழங்குவதன் மூலமே அமெரிக்காவுடன் பிற பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க முடியும் என ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரவுஹானி தெரிவித்துள்ளார்.

இதேவேளை டெஹ்ரானின் ஏவுகணை திறன்கள் பேச்சுவார்த்தைக்குட்பட்டவை அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகத் தலைவர்களின் ஐக்கிய நாடுகள் சபையின் ஆண்டு கூட்டத்தின் போது நியூயோர்க்கில் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலில், இந்த ஒப்பந்தம் முழுமையாகச் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் அதாவது பொருளாதாரத் தடைகள் நீக்கப்



பட்டு, அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தத்திற்கு திரும்ப வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதன் பின்னரே பிற பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்க முடியும் என ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரவுஹானி கூறினார்.

அத்தோடு எந்தவொரு பேச்சுவார்த்தையும் சாத்தியமானதற்கு முன்னர், ஈரானுடன் பேசுவதற்கான அதன் முன் நிபந்தனைகளை அமெரிக்கா நீக்க வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாகவும் ஈரானிய ஜனாதிபதி தெரிவித்தார். (ஜ-2)

...செயற்பட்ட ...கவல்கள் ...தன் ஆர்பி ... செயற்படு ...தார். ...நக்கு என் ...ன்ற கேள் ...அளிக்கை ... நேர்ந்தது ... விஞ்ஞா ...ய வேண் ...ார். தொட ...ாது. "இது ...ருக்கு ஒரு ...ும். தோல் ...ள் கற்றுக் ... குறிப்பிட்ட ... கூட ஜெட் ...கூடத்தில் ...ரம் வேண் ... வந்தார். ...ம் கழித்து ...ந்தகவல் ...ர். அதில் ...ான் பார்ப் ...கவில்லை ...ர்" என்று (ஜ-2)

# பதவி நீக்க நாடாளுமன்றம் முனைப்பு; நடவடிக்கை குறித்து ட்ரம்ப் நகைப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் உக்ரைன் ஜனாதிபதியும் பேசிய தொலைபேசி உரையின் விபரங்களை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவல்களைக் கொண்டு ட்ரம்பை பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கையை அமெரிக்க நாடாளுமன்றம் ஆரம்பிக்கவுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் துணை ஜனாதிபதியுமான ஜோ பைடனின் செயற்பாடுகளை விசாரிக்க உக்ரேய்ன் ஜனாதிபதி வாலடிமீர் செலன்ஸ்கியிடம் ஜூலை 25 ஆம் திகதி ஜனாதிபதி ட்ரம்ப் கேட்டுக்கொண்டதாக வெள்ளை மாளிகை வெளியிட்ட விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஜோ பைடனின் மகன் உக்ரேய்ன் எரிவாயு நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்தார். தனது அரசியல் எதிரியான ஜோ பைடனை களங்கப்படுத்தும் நோக்கில் உக்ரேய்னுக்கு வழங்கும் இராணுவ உதவியை நிறுத்தி வைத்தாக கூறப்படுவதை ட்ரம்ப் மறுத்து வருகிறார். இதனிடையே ட்ரம்ப் - வாலடிமீர் தொலைபேசி அழைப்பு, இந்த ஊழலை முதன் முதலில் வெளிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதியின் செயற்பாடுகளில் பதவி நீக்கத்திற்கு வகை செய்கின்ற அதிகாரபூர்வ நடவடிக்கை மேற்கொள்ள நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் அவையில் ஜனநாயகக் கட்சித் தலைவரும், அவைத் தலைவருமான நான்சி பலோசி கடந்த செவ்வாய்க்



கிழமை தொடங்கியுள்ளார்.

இந்நிலையிலேயே ட்ரம்பை பதவியிலிருந்து நீக்கும் முயற்சியில் அமெரிக்க நாடாளுமன்றம் இறங்கியுள்ளது.

எனினும் நாடாளுமன்றத்தின் இந்த நடவடிக்கை வேடிக்கையாக உள்ளது என ட்ரம்ப் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# உத்தர பிரதேசத்தில் கனமழை; ஒரேநாளில் 25 பேர் பலி!



(லக்னோ)

உத்தர பிரதேச மாநிலத்தில் பெய்து வரும் கனமழைக்கு நேற்றைய தினம் 25 பேர் பலியாகினர். உத்தர பிரதேச மாநிலத்தில் சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. மாநிலத்தின் கிழக்கு மற்றும் மத்திய பகுதிகள் மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. மாநிலத்தின் முக்கிய நகரங்களான ரேபரேலி. அமேதி. லக்னோ. உன்னாவ் ஆகிய நகரங்கள் உட்பட பல இடங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர்.

இது குறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில்.

மழை வெள்ளம் தொடர்பான விபத்துக்களில் 25 பேர் உயிரிழந்தனர். மரங்கள் வேரோடு சாய்ந்ததால் தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன எனத் தெரிவித்தனர். (ஜ-2)

# அச்சுறுத்தலுக்கு அஞ்ச வேண்டாம்!





(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையம் முன்பாக திரண்ட பல்லாயிரக்கணக்கான அதிபர், ஆசிரியர்கள் - லோட்டஸ் வீதியில் பேரணியாக சென்றபோது - ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் கலகமடக்கும் பொலிஸாரால் பேரணி இடைமறிக்கப்பட்டது. பின்னர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப்ஸ்ராலின் உள்ளிட்ட ஐவர் ஜனாதிபதி செயலகத்துக்கு பேச்சுவார்த்தை என அழைக்கப்பட்டனர்.

எனினும் - ஜனாதிபதி செயலகத்தில் பொறுப்பாக பதில் வழங்கக்கூடிய எவரும் காணப்படவில்லை. இதனால் பதிலளிக்கக்கூடியவருடனேயே பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முடியும் என ஜனாதிபதி செயலக உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அதனால் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை.

சில பாடசாலை அதிபர்களுக்கு சிலரால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் அதனால் - ஆசிரியர்களை பாடசாலை வருமாறு அதிபர்கள் ஒரு சிலர் அழைப்பதாகவும் தகவல்கள் எமக்குக் கிடைத்தன.

இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு அதிபர், ஆசிரியர்கள் பயப்படத்தேவையில்லை. இத்தகைய அச்சுறுத்தல் அனைத்தையும் ஏற்கனவே வாக்குறுதியளித்தவாறு இலங்கை ஆசிரியர் சங்கம் பொறுப்பெடுக்கும் என மீண்டும் தெரிவிக்கின்றோம் என ஜோசப் ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயிரிழந்தவர்கள், வெளிநாடு சென்றவர்களின் விபரங்கள் தேர்தல் ஆணையகத்தால் சேகரிப்பு

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டு தேர்தல் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட பின்னர் வெளிநாடு சென்றவர்கள் மற்றும் உயிரிழந்தவர்கள் குறித்த தகவல்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்தது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னர் உயிரிழந்தவர்கள் மற்றும் வெளிநாடு சென்றவர்கள் தொடர்பான விபரங்களை ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர்களும் சேமித்து அது குறித்த தகவல்களை மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையகம் சுட்டிக்காட்டியது. (இ-7)

# ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்; தாய்மாருக்கு ஜனாதிபதி நிதியுதவி





(கொழும்பு)

பாரிய பொருளாதார சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்த பெற்றோருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி செயலகத்தில் நிதி உதவி வழங்கினார்.

இதற்கமைய ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான வத்தளை, ஹெந்தல பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி. முதித்தா தனஞ்சனி எதிரிவீரகவுக்கு 25 இலட்சம் ரூபாய் நிதி உதவியும் ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இம்பல்கஸ் தெனிய யட்டத்தாவல பிரதேசத்தில் வசிக்கும் கே.எம்.துஷித்த மங்கள ரூபசிங்கவுக்கு 20 இலட்சம் ரூபாய் நிதியுதவியும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது. (இ-7)

# 6 அலுவலக புகையிரதங்களே சேவையில்

(கொழும்பு)

ரயில்வே தொழிற்சங்க ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக 6 அலுவலகப் புகையிரதங்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக ரயில்வே பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே தொழிற்சங்க ஊழியர்கள் குறித்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

எனினும், குறித்த பணிப் பகிஷ்கரிப்பு குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படவில்லை எனப் போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# போதும் என்கிற மனம்

ஒரு ஊரிலே ஒரு பெரிய மனிதன் இருந்தார்.

வசதியிலே தான் பெரிய மனிதனே தவிர குணத்தில் இல்லை. இன்னும் பெரிய மனிதனாக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனால் யாருக்கும் ஒரு பைசா கொடுக்க மாட்டார். மகா கஞ்சப் பிரபு. அடுத்தவர்கள் நல்லமாதிரி இருந்தால் அதை இவரால் தாங்கிக் கொள்ள முடியாது. பொறாமைப்படுவார். அப்படிப்பட்ட பெரிய மனிதன். அவருடைய வீட்டுக்கு நேர் எதிரில் ஒரு ஏழை இருந்தார். அவர் ரொம்ப நல்லவர். தான் கஷ்டப்பட்டாலும் அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பவர்.

ஒரு நாள் ஒரு சந்நியாசி அந்த ஊருக்கு வந்தார். அந்தப் பெரிய மனிதன் வீட்டுக்கு முன்னால் போய் நின்றார். கதவைத் தட்டினார். கதவைத் தட்டிய சத்தம் அந்தப் பெரிய மனிதன் காதில் விழுந்தது. இருந்தாலும் அவர் கதவைத் திறக்கவில்லை.

கதவைத் திறந்தால் யாராவது ஏதாவது கேட்பார்கள், கொடுக்க வேண்டியிருக்கும் என்று நினைத்துக்கொண்டு பேசாமல் இருந்து விட்டார். சந்நியாசி கொஞ்சநேரம் இருந்து பார்த்தார். யாரும் கதவைத் திறக்கவில்லை என்றவுடன் எதிர் வீட்டுக்குப் போய் விட்டார்.

அதுதான் அந்த ஏழை வீடு. கதவைத் தட்டினார். உடனே அந்த ஏழையும் அவர் சம்சாரமும் கதவைத் திறந்தார்கள். சந்நியாசியைப் பார்த்தார்கள். உள்ளே வாங்க என்று கூப்பிட்டார்கள்.

உட்கார வைத்து இரவு சாப்பாடு முடிந்து போய் விட்டது. அதனால் புதுசாக சமையல் செய்து அவருக்குக் கொடுத்தார்கள்.

சந்நியாசி திருப்தியாக சாப்பிட்டார். சாப்பிட்டு விட்டு புறப்படுகின்ற சமயத்தில் அவர்களைப் பார்த்து எனக்கு ரொம்ப திருப்தியாக இருக்கிறது. உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஏதாவது மூன்று வரம் கேளுங்கள்... தருகிறேன் என்றார். அதற்கு அந்த ஏழையும் சம்சாரமும் உங்கள் அன்புக்கு ரொம்ப நன்றி சுவாமி. இருந்தாலும் எங்களுக்கு வரம் ஒன்றும் தேவையில்லை. ஏனென்றால் இப்பவே நாங்கள் இரண்டு பேரும் ரொம்ப சந்தோசமாகத்தான் இருக்கிறோம் என்றார்கள். இருப்பதைக் கொண்டு திருப்தி அடையும் ரகம் அவர்கள்.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற பொன்மொழியை புரிந்து கொண்டவர்கள் போலிருக்கிறது. சரி என்று சொல்லி சந்நியாசி புறப்பட்டார். இருந்தாலும் அவராலே சும்மா போக முடியவில்லை.

இவர்களுக்கு ஆசீர்வாதம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார். ஆசீர்வாதம் செய்தார். உடனே அந்த ஏழையின் வீடு ஒரு மாளிகையாக மாறியது. எல்லா வசதியும் வந்து விட்டது.

அடுத்த நாள் காலையிலே அந்தப் பெரிய மனிதன் தன் வீட்டு வாசல் கதவைத் திறந்து பார்த்தார். ஒரே ஆச்சரியம்: எதிரில் வழக்கமாகப் பார்க்கின்ற குடிசையைக் காணவில்லை. அது மாளிகையாக மாறியிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று விசாரித்தார். விபரத்தைப் புரிந்து கொண்டார். உடனே அந்த சந்நியாசியைத் தேடிக் காரை எடுத்துக் கொண்டு போனார். ஒரு காட்டுக்குள்ளே உட்கார்ந்திருந்தார். அவருடைய காலில் போய் விழுந்தார்.

"என்னை மன்னித்து விடுங்கள் சாமி! ஏதோ தெரியாத்தனமாக அப்படி நடந்து கொண்டேன்" என்றார். இப்ப உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் சந்நியாசி.

வேறு ஒன்றும் வேண்டாம். அந்த ஏழைக்கு கொடுக்கிறதாகச் சொன்ன அந்த மூன்று வரங்களை மட்டும் எனக்குக் கொடுத்தால் போதும் என்றார். சரி கொடுக்கிறேன். ஆனால் ஒரு விடயம். உனக்கு என்ன வேணும் என்று நீ முதல் மூன்று தடவை எதை நினைக்கிறாயோ அப்பவே கிடைத்துவிடும் என்று சொன்னார் சந்நியாசி.

சரி என்று வரத்தை வாங்கிக் கொண்டு அந்த பெரிய மனிதன் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார் ரொம்ப உற்சாகமாக!

வழியில் ஒரு இடத்திலே சகதியிலே மாட்டியது அந்தக் கார். அவருக்கு எரிச்சலாகப் போய்விட்டது. எனக்கு வரம் கிடைத்த விபரத்தை சீக்கிரமாக போய் ஊர் பூராகவும் சொல்லலாம் என்று நினைத்தால் இடையில் இந்தக் கார் இப்படி மர்க்கர் பண்ணுதே! இந்தக் கார் இருந்தாலும் ஒன்றுதான் எரிந்து போனாலும் ஒன்றுதான் என்று நினைத்தார். அவ்வளவுதான் அவர் வாங்கிய அந்த வரம் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது.


கார் அப்படியே தீப்பிடித்து எரிந்து சாம்பலாகப் போய் விட்டது. வாங்கிய முதல் வரம் முடிந்தது. சரி இரண்டு வரம் பாக்கி இருக்கு பார்த்துக்கலாம் என்று நினைத்து நடந்தே வீட்டுக்குப் புறப்பட்டார்.

உச்சி வெயில் வியர்க்க விறுவிறுக்க நடந்து சென்று கொண்டிருந்தார். தாகம் வேறு. தண்ணீர் கிடைக்கவில்லை. மனைவியை நினைத்தார். நான் இப்படி கொதிக்கிற வெயிலில் நடந்து கொண்டிருக்கிறேன் அவள் மட்டும் ஆனந்தமாக ஏ.ஸி.ரூம்மில் பங்களாவுக்குள்ளே உட்கார்ந்து கொண்டிருப்பாள்: என் கஷ்டம் அவளுக்கு என்ன தெரி யும்? அந்த பங்களா பத்தி எரிந்தால் தான் என் கஷ்டம் என்ன என்பது அவளுக்குத் தெரியும் என்று நினைத்தார்.

அவ்வளவு தான் இரண்டாவது வரம் வேலை செய்தது. பங்களா பற்றி எரிந்து போய்விட்டது. அவளுக்கு தீக்காயம். அதை நேரில் பார்த்தார். இப்பேர்ப்பட்ட கஷ்டத்தைப் பார்க்கிறதற்காக கடவுள் கண்ணைக் கொடுத்தார்? இந்தக் கண் இருந்து என்ன பிரயோசனம் என்று நினைத்தார். அவ்வளவுதான் மூன்றாவது வரமும் வேலை செய்ய ஆரம்பித்தது. பார்வை போய்விட்டது.

வரம் வாங்கியும் அந்த மனிதனுக்கு நல்ல விதமாகப் பயன்படவில்லை பார்த்தீர்களா? அதுக்கு என்ன காரணம்? பொறாமை, சுயநலம், முன்கோபம் எல்லாம்தான்! இந்த மூன்றும் இருந்தால் அடுத்தவர்கள் நல்லது செய்தாலும் அது நமக்கு நல்ல விதமாக அமையாது.

# வல்லிபுர ஆழ்வாரின் மஹோற்சவம் இன்று ஆரம்பம்



ஈழத்திருநாட்டின் சரித்திரப் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயங்களில் ஒன்றான வடமராட்சி பகுதியிலே துன்னையம்பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் விகாரிவருட 2019 ஆம் ஆண்டின் கொடியேற்றத் திருவிழா தமிழ் புரட்டாதி 9 ஆம் திகதி (28-09.2019) சனிக்கிழமை இன்று வெகு சிறப்பாக, பக்திபூர்வமாக இடம்பெறுகின்றது. இன்று ஆரம்பமாகிய திருவிழா தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெற்று அன்று இடம்பெறுகின்ற கேணித் திருவிழாவுடன் மாலை 6 மணிக்கு இடம்பெறுகின்ற கொடியிறக்கத்திருவிழாவுடன் இனிதே நிறைவுபெறும். கொடியேற்ற நாளிலிருந்து 7 ஆம் திருவிழா வரை சுவாமி உள்வீதி வலம்வந்து காட்சி கொடுத்து 05.10.2019 இல் இருந்து 14.10.2019 வரை சுவாமி வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார்.

அந்தவகையில் 05.10.2019 அன்று குருக்கட்டு விநாயகர் திருவிழாவும் தொடர்ந்து 6 ஆம் திகதி வெண்ணெய் திருவிழாவும் 7 ஆம் திகதி துகில் திருவிழாவும் 8 ஆம் திகதி பாம்புத்திருவிழாவும் 9 ஆம் திகதி ஹம்சன் போர்த் திருவிழாவும் 10 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 11 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 13 ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் 14 ஆம் திகதி கேணித்திருவிழாவும் இடம்பெற்று அன்று இடம்பெறுகின்ற கொடியிறக்கத் திருவிழாவுடன் மஹோற்சவத் திருவிழா இனிதே நிறைவு பெறும். சுவாமி வெளிவீதி வந்து காட்சி தரும் வேளையில் கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்களால் அந்த அந்த நாள் உற்சவத்தை சித்திரிக்கும் முறையில் ஆற்றுப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெறுவதைக் காணலாம்.

இவ்வாலயத்தைச் சுற்றி உள்ள கிராம மக்களாகிய கற்கோவளம், புலோலி, துன்னாலையூர் வாசிகள் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து பாரம்பரிய வழக்கத்தைப் பின்பற்றி நீண்ட காலமாக மஹோற்சவ உபயம் செய்கின்ற நிலை இங்கு காணப்படுகிறது. மற்றைய ஆலயங்களிலே மூலஸ்தானத்திலே விக்கிரகங்கள் அமைந்திருக்கும். ஆனால் இங்கு மூலஸ்தானத்தில் சுயம்பு வடிவமான ஸ்ரீ சுதர்சன சக்கரமே அமைந்துள்ளது இவ் ஆலயத்தின் சிறப்பு அம்சமாகும். ஸ்ரீ விஸ்ணு சகஸ்ர நாமத்தை பாராயணம் செய்வதும் அதைக் கேட்பதுமே நாம் எடுத்த மனிதப் பிறவியின் பல்வினைகளைப் போக்கி வைகுந்த பிராப்தம் தருவதாகும். வல்லிபுர ஆழ்வாரின் மேற்குப்புறம் அமைந்துள்ள குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்திற்கும் வல்லிபுர ஆழ்வாருடைய ம்ஹோற்சவத்திற்கும் பாரம்பரிய தொடர்புகள் உள்ளதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. வல்லிபுர ஆழ்வாரின் கொடியேற்றத் திருவிழாவிற்கு இரண்டு தினங்களிற்கு முன்னர் குருக்கட்டு விநாயகரின் ஆலய முன்றலில் கொடியேற்றி விநாயகருக்கு விசேட பூஜை வழிபாடுகள் செய்து விநாயகர் பக்தர்கள் புடைசூழ வீதிவலமாக வல்லிபுர மாயவன் ஆலயம் சென்று வருவதும் உற்சவ காலங்களில் வல்லிபுரமாயவன் குருக்கட்டு விநாயகர் ஆலயம் சென்று வருவதும் தொன்றுதொட்டு உள்ள ஆலய மரபாக பேணப்படுகிறது.

இன்றைய கொடியேற்ற நன்னாளிலே வடபகுதியில் இருந்தும் இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் இலட்சக் கணக்கான பக்தகோடிகள் கலந்து கொண்டு இருக்கின்றார்கள். எங்கு பார்த்தாலும் ஆலய வளாகத்தில் "அரோகரா" கோஷம் வானைப்பிளக்கின்றது. அந்தணர்களின் வேதபாராயண ஒலி, மறுபுறம் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை தீர்ப்பதற்காக ஆண் அடியவர்கள் காவடி எடுத்தும் அங்கப்பிரதிஸ்டை செய்தும் பெண் அடியவர்கள் அடி அடித்தும் கற்பூரச் சட்டி ஏந்தியும் தங்கள் கடன்களை செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அடியார்களுக்கு தாகசாந்தி வழங்குவதற்காக ஆங்காங்கே தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப் பெற்றும் பசியைப்போக்க அன்னதான மடங்களிலே அன்னதானம் வழங்கவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சுகாதாரத்தைப்பேண சுகாதாரப் பகுதியினர் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் களவுகளை ஒழிக்க பொலிஸாரும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். எனவே அந்தவகையில் வல்லிபுரமாயவனின் கொடியேற்றத்தை காணவரும் பக்தர்களுக்கு வல்லிபுர ஆழ்வார் வல் வினை அகற்றி நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ அருள்பாலித்து நம்நாட்டில் உள்ள அனைவரும் இன்புற்று வாழ்ந்து இந்த மண்ணில் மனிதப்பிறவி எடுத்ததன் நற்பயனை அனுபவித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ திருவருள் பாலிப்பாராக!

"கலைஞாயிறு"
கந்தையா கனகசபை,
சண்டிலிப்பாய்.

---

## சஜித்தா? கோத்தபாயவா?

# ஜனாதிபதித் தேர்தல் முடிவில் ஜம்பர் அணியப்போவது யார்?

### சூடுபிடித்த விவாதம்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவிற்கு சிறைச்சாலை உடையை அணிவிக்க விரும்புபவர்கள் எதிர்காலத்தில் அதனை அணியவேண்டிய நிலையேற்படலாம் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றால் கோத்தபாய ராஜபக்ஷ ஜம்பர் அணியவேண்டிய நிலையேற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்த கருத்திற்கே மகிந்த இவ்வாறு பதில் கருத்தை வெளியிட்டார்.

சஜித் பிரேமதாஸவிற்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதத்தில் இடம்பெற்ற மத்துகம பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சி



யின் நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்ற மறுநாளே பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் (கோத்தபாய) ஜம்பர் அணியவேண்டியிருக்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் சிலர் செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கைகள் காரணமாகவே ராஜபக்ஷாக்களைச் சிறையில் அடைக்க முடியவில்லை. ஆனால் சஜித் ஜனாதிபதியானதும் அந்த யுகம் முடிவிற்கு வரும் என அவர் தெரிவித்தார். இதற்குப் பதிலளிக்கையிலேயே மகிந்த, கோத்தபாய ராஜபக்ஷவிற்கு சிறைச்சாலை உடையை (ஜம்பர்) அணிவிக்க விரும்புவர்கள் எதிர்காலத்தில் ஜம்பர் அணியவேண்டிய நிலையேற்படலாம் எனத் தெரிவித்தார்.

அரசாங்கம் எதிரணியினரைப் பழிவாங்குவது குறித்தே கவனம் செலுத்துகின்றது எனவும் மகிந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# சந்தேகத்திற்கிடமான முறையில் நான்கு யானைகள் உயிரிழப்பு

(ஹபரண)

ஹபரண, ஹிரிவதுன்ன பகுதியில் நான்கு யானைகள் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்தமை குறித்து வன விலங்குத் துறை அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

ஹிரிவதுன்ன பகுதியிலுள்ள குளம் ஒன்றுக்கு அருகிலேயே இந்த யானைகள் உயிரிழந்த நிலையில் நேற்றுக் காலை கண்டு



பிடிக்கப்பட்டன. (இ-7)

---

## எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய மருத்துவ குறிப்புக்கள்

### வாய் துர்நாற்றமா?

சிலர் நெருங்கி வந்து பேசும்போது வாய் துர்நாற்றம் முகம் சுளிக்கச் செய்து விடும்.

இந்த நிலையைப் போக்க வேண்டுமென்றால் முதலில் பல் மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற வேண்டும். பல்வலி, சொத்தை, ஜீரணம் ஆகாமல் இருத்தல், மலச்சிக்கல் இவை களில் எது இருந்தாலும் வாய் துர்நாற்றம் ஏற்படலாம்.

மலச்சிக்கல், செரிமானக் கோளாறு என்றால் எலுமிச்சம் பழத்தை சாறாக்கி உப்பு சேர்த்து ஒரு டம்ளர் தண்ணீர் சேர்த்து தினமும் இரண்டு வேளை குடிக்க வேண்டும். இதற்கு பதிலாக சாத்துக்குடிச் சாறும் சாப்பிடலாம். சாப்பாட்டுக்கு முன்பும் பின்பும் உலர்ந்த அல்லது புதிய நெல்லிக் காய் ஒன்றை மெல்லவும். உலர்ந்த நெல்லிக்காய்ப் பொடி என்றால் இரண்டு தேக்கரண்டி வாயில் போட்டுக்கொ ண்டு தண்ணீர் குடிக்கவும். பொதுவாக மலச்சிக்கல் இல்லாத வாறு பார்த்துக் கொண்டால் வாய் துர்நாற்றம் ஏற்படாது.

---

# "பார்வதி திருக்கல்யாணம்" கதாகாலஷேபம் நாளை

(கொழும்பு)

கொழும்பு மகளிர் இந்து மன்றம் நடத்தும் நவராத்திரி பூஜையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.55 மணியளவில், கொழும்பு-3, பகதல வீதியிலுள்ள அன்பு இல்லத்தில் கதாகாலஷேபம் இடம்பெறும். இதில் "பார்வதி திருக்கல்யாணம்" என்னும் தலைப்பில் கலை இளவரசன், கதாகாலபூஷணம் சு.அனந்தநாராயணன் கதாகாலஷேபம் வழங்குவார். (இ-5)

---

# பரீட்சைகள் அனைத்தும் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டு முதலாம் பருவ கால பரீட்சைகள் அனைத்தும் தலைமைக் காரியாலயத்தின் பரிந்துரைக்கு அமைய அடுத்த அறிவிப்பு கிடைக்கப்பெறும் வரை பிற்போடப்பட்டுள்ளது.

மேலதிக விபர ங்கள் பத்திரிகை மற்றும் இணையத்தள வாயிலாக தெரிவிக்கப்படும்.


இணையத்தள முகவரி:- www.jaffna.sliate.ac.lk and www.sliate.ac.lk எனப் பணிப்பாளர் அறிவித்தார். (இ

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம் - பகுதி I

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



2009 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் வெளியிட்ட கூட்டறிக்கையில் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவதாக அரசாங்கம் கூறியிருந்தது.

அதன் இறுதியில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டில்லி யில் என்.டி.ரிவி நிறுவனத்துடன் நடத்திய கலந்துரையாடலின் போது, 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தமும், அதற்கு அப்பால் சென்ற ஒன்றையும் வழங்கத் தான் தயாராக இருப்பதாக கூறியிருந்தார். அவர் இந்த உறுதிமொழியை இந்திய பிரதமருக்கு வழங்கியிருந்தார். அதன்பின் இலங்கைக்குச் சென்று தன்னைச் சந்தித்த சகல இந்திய அரசியல் பிரதிநிதிகளிடமும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை செயற்படுத்த தயாராக இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

அது மாத்திரமல்ல, மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க சென்ற கடும் விடுதலைப்புலி எதிர்ப்பாளரான இந்திய அரசியல்வாதி சுப்பிரமணியன் சுவாமி, 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை கூடிய விரைவில் செயற்படுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

இலங்கை தமிழ் மக்களின் நியாயமான பிரச் சினைகளுக்கு தீர்வாக, 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என சகல இந்திய அரசியல் கட்சிகள் மாத்திரமல்லாது மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் சர்வதேச சமூகமும் நம்புகின்றன" என்று தனது கட்டுரையில் சுனந்த தேசப்பிரிய குறிப்பிட்டிருந்தார்.

**2009 Joint communiqué between the UN Secretary General and the Sri Lanka President**

President Rajapaksa expressed his firm resolve to proceed with the implementation of the 13th Amendment,as well as to begin a broader dialogue with all parties, including the Tamil parties in the new circumstances, to further enhance this process and to bring about lasting peace and development in Sri Lanka. (srilankabrief.org)

**2009 May joint statement between the Indian Prime Minister and the Sri Lankan President**

The Prime Minister emphasized that a meaningful devolution package, building upon the 13th Amendment, would create the necessary conditions for a lasting political settlement. The President of Sri Lanka reiterated his determination to evolve a political settlement acceptable to all communities….the President expressed his resolve to continue to implement in particular the relevant provisions of the Constitution. (srilankabrief.org)

13க்குமேல்

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தில் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கு இதுவரையில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு முயற்சித்த போதும் அது பயனளிக்கவில்லை.

13க்குமேல்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் காலத்தில் மங்கள முனசிங்க அறிக்கை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் 2000 ஆம் ஆண்டு அறிக்கை மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அனைத்துக் கட்சி தெரிவுக் குழு மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் அறிக்கை போன்றன 13ஆவது திருத்த அரசியல் யாப்பிற்கு அதிகளவு முன்னேற்றங்களை பரிந்துரைத்திருந்தன. ஆனால் அவை எதுவும் சட்டமாக்கப்படவில்லை.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் காலத்தில் மங்கள முனசிங்க அறிக்கை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் 2000 ஆம் ஆண்டு அறிக்கை மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அனைத்துக் கட்சி தெரிவுக்குழு மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் அறிக்கை போன்றன அரசியல் யாப்பிற்கு அதிகளவு முன்னேற்றங்களை பரிந்துரைத்திருந்தன. அவை எதுவும் சட்டமாக்கப்படவில்லை.

### 2013ஆம் ஆண்டில் 13ஆவது திருத்தம் சம்பந்தமாக அரசியல் கட்சிகள் கொண்டிருந்த நிலைப்பாடு

இந்தியாவும் ஐக்கிய நாடுகள் சபையும் தொடர்ந்து கொடுத்த வற்புறுத்தல் காரணமாக அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக ஆராய்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் முதலாவது அமர்வு 2013ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி நடைபெற்றது. அரசாங்கம் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஐ.தே.க., ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் சமுகமளிக்கவில்லை. இத் தெரிவுக்குழு பல கூட்டங்களை நடத்தியபோதும் தீர்வு எதனையும் எட்டவில்லை. இச் சந்தர்ப்பத்தில் கட்சிகள் பலவும் 13ஆவது திருத்தம் பற்றி தமது கருத்தைத் தெரி வித்திருந்தன. அவை கீழே வருமாறு,

### 13ஆவது திருத்தம் இல்லாது ஒழிக்கப்படவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்த கட்சிகள்

- மக்கள் விடுதலை முன்னணி- சோமவன்ஸ அமரசிங்க
- ஜாதிக ஹெல உறுமய- பாட்டலி சம்பிக்க ரணவக்க
- தேசிய சுதந்திர முன்னணி - விமல் வீரவன்ச
- மகாஜன எக்சத் பெரமுன- தினேஷ் குணவர்த்தன

### 13ஆவது திருத்தம் முழுவதுமாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்த கட்சிகள்

- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - இரா.சம்பந்தன்
- ஐக்கிய தேசியக் கட்சி- ரணில் விக்கிரமசிங்க
- அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் - ரவூப் ஹக்கீம்
- இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி - டியூ குணசேகர.
- லங்கா சமசமாஜக் கட்சி - திஸ்ஸ விதாரண.
- ஜனநாயக இடது முன்னணி - வாசுதேவ நாணயக்கார
- ஜனநாயக கட்சி - சரத் பொன்சேகா
- மலையக மக்கள் முன்னணி - வி.எஸ். இராதாகிருஷ்ணன்
- ஜனநாயக மக்கள் முன்னணி - மனோ கணேசன்
- தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி - சிவநேசதுரை சந்திரகாந்தன்
- ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - டக்ளஸ் தேவானந்தா

இக் கட்சிகளை விட இந்திய அரசாங்கமும், கத்தோலிக்க ஆயர் மன்றமும் 13ஆவது திருத்தம் முழுவதுமாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தன.

### 13ஆவது திருத்தம் சம்பந்தமாக கருத்து தெரிவிக்காத கட்சி

- இலங்கை சுதந்திரக் கட்சி - மகிந்த ராஜபக்ஷ

2013இல் பொலிஸ்மாஅதிபராவிருந்த என்.கே. இலங்கக்கோன் மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் கொடுக்கப்பட்டால் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகிவிடும் என்ற கருத்தை வெளியிட்டார்.

2013இல் பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோத்தபாய ராஜபக்ஷ 13ஆவது திருத்தம் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.


2013இல் ஜனாதிபதியின் செயலாளராகவிருந்த லலித் வீரதுங்க 13ஆவது திருத்தம் பல நிர்வாகச் சிக்கல்களை ஏற்படுத்துகிறதென்றும் இத் திருத்தம் மக்களின் விருப்பமில்லாமல் அவர்களுக்கு புகுத்தப்பட்டதொன்று என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

**மாகாண சபையின் கட்டமைப்பும் பதவிகளும்**

ஒவ்வொரு மாகாணத்திலும் அரசியல், நிர்வாக மற்றும் நிதி பொறுப்புகள் சம்பந்தமான அதிகாரம் மிக்க கட்டமைப்புகள் மற்றும் பதவிகளைக் கொண்ட ஒரு மாகாண சபை அமைந்துள்ளது.

அதன் கட்டமைப்பும் பதவிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

- மாகாண சபை
- ஆளுநர்
- முதலமைச்சர்
- அமைச்சரவை
- தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர்
- மாகாண மேல் நீதிமன்றம்
- நிதி ஆணைக்குழு
- பிரதம செயலாளர்
- மாகாண பகிரங்கசேவை
- மாகாண பகிரங்கசேவை ஆணைக்குழு
- மாகாண நிதியம்




மாகாண சபை கட்டமைப்பு

### • 13ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து இயற்றப்பட்ட அதிகாரப் பகிர்வு தொடர்பான பாராளுமன்றச் சட்டங்கள்


1. இலங்கை அரசியல் யாப்பு-1978
2. மாகாண சபைகள் சட்டம் - 1987இன் இல. 42
3. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் - 1988இன் இல. 2
4. மாகாண சபைகள் (சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு) சட்டம் - 1988இன். இல. 37
5. மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1988இன் இல. 55
6. மாகாண சபைகள் (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டம் - 1989இன் இல. 12
7. பொலிஸ் ஆணைக்குழு சட்டம் - 1990இன் இல: 1
8. சட்டமா அதிபர் சேவைகள் (திருத்தச்) சட்டம் - 1990இன் இல. 9
9. மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் - 1990இன் இல. 19
10. மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம் - 1990இன் இல. 27
11. மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம் - 1990இன் இல. 28
12. மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் - 1990இன், இல. 29
13. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டம் - 1991இன் இல. 29
14. பெருநகர கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் - 1992இன் இல. 49
15. அதிகார மாற்ற (பிரதேச செயலாளர்கள்) சட்டம் - 1992இன் இல. 58
16. மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் -1993இன் இல. 7
17. மாகாண சபைகள் ஓய்வூதியம் சட்டம்-1993இன் இல. 17
18. நீரப்பாசனம் (திருத்தச்) சட்டம் - 1994இன் இல. 13
19. மாகாண சபை வருவாய் வரிகள் (வரம்புகள் மற்றும் விலக்குகள்) சட்டம் - 1995இன் இல. 25
20. மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் - 1996இன் இல. 10
21. மண் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் - 1996இன் இல. 24
22. இலங்கை உள்ளூராட்சி நிர்வாக நிறுவனம் சட்டம் - 1999இன் இல. 31
23. மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்- 2006இன் இல. 54

குறிப்பு:- முழு மாகாண சபை கட்டமைப்பும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தையும் மற்றும் மாகாணங்கள் சபை சட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டது. மேலே பட்டியலிடப்பட்ட பிற சட்டங்கள் மாகாண சபை செயற்பாடுகளை அதிக அல்லது குறைந்த அளவிற்கு பாதிக்கின்றன.

(தொடரும்...)

# சு.கட்சி பெரமுனவுடன் இறுதியில் இணையும்

## கெஹலிய நம்பிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வ அறிவித்தல் எதனையும் இன்னும் வெளியிடவில்லை. இந்நிலையில் இறுதியில் சுதந்திரக்கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணையும் என்று நம்புவதாகவும் அவர்களுக்காக கதவு எப்போதும் திறந்து இருக்கிறது என்றும் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்‌ஷவின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவால் கொழும்பு மெண்டரினா ஹோட்டலில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் இணைவது குறித்து இரு தரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன.


அவர்கள் எப்போதும் எங்களுடன் இணைய முடியும். அதற்கான கதவுகள் திறந்தே உள்ளன. எங்களின் புதிய கூட்டணியில் இதுவரையிலும் பல்வேறு கட்சிகள் ஒன்று சேர்ந்துள்ளன.

சுதந்திரக் கட்சியினர் கொள்கைகளில் மாறுபட்டவர்கள் இல்லை. அவர்கள் உறுதியான கொள்கைகளைக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான இந்த அரசாங்கத்தின் நான்கரை வருட காலத்தில் அங்கம் வகித்த அனுபவமும் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே இறுதியில் எங்களுடன் இணைவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கல்லுண்டாய், உடுவில் வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தில்





(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மீள வருகை தருகின்ற அகதிகளின் வீட்டுத் தேவையை நிறைவேற்றுமுகமாக தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சால் அமுல்படுத்தப்படும் யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்லுண்டாய் மற்றும் உடுவில் வீட்டுத் திட்டத்தின் நிர்மாணப்பணிகள் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளதாக அமைச்சின் செயலாளர் வீ.சிவஞானசோதி தெரிவித்தார்.

கல்லுண்டாய் வீட்டுத் திட்டத்தில் 48 வீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, உடுவில் வீட்டுத் திட்டத்தில் 55 வீடுகள் உள்ளடங்கியுள்ளன. இவ்வீடுகள் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

உரிய வீட்டுத் திட்டங்களின் நிகழ்கால முன்னேற்றத்தை கண்டறிவதற்காக அமைச்சின் செயலாளர் வீ.சிவஞானசோதி அப்பிரதேசங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டார்.

இவ்வீட்டுத் திட்டத்தில் வீடொன்றிற்கு ஒரு மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளதோடு கல்லுண்டாய் மற்றும் உடுவிலில் 103 வீடுகளுக்காக செலவழிக்கப்படுகின்ற மொத்தத் தொகை 103 மில்லியன் ரூபாய் ஆகும்.

வீட்டுத் திட்டங்களுக்குரிய உள்ளக வீதி, மின்சாரம், குடிநீர் வசதிகள், சுகாதாரம் உள்ளடங்கிய அத்தியாவசிய வசதிகளையும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்லுண்டாய் மற்றும் உடுவில் வீட்டுத் திட்டங்களின் உள்ளக வீதி நிர்மாணித்தலுக்காக செலவழிக்கப்பட்ட தொகை 18.5 மில்லியன் ரூபாவாகும்.

2019 ஆம் ஆண்டுக்குரிய திட்டங்களின் கீழ் வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி உரிமையாளர்களால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2950 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதோடு அதில் 1500 வீடுகள் இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புரட்டாதி சனியின் இரண்டாவது வாரம்



சனியைப் போல கெடுப்பவனும் இல்லை, சனியைப் போல கொடுப்பவனும் இல்லை என்று கூறுவார்கள். சனிபகவான் அநீதியாக நடக்கமாட்டார். நீதியிலிருந்து சிறிதும் பிறழ மாட்டார். அவரை வணங்கி கேட்கும் வரங்களை அருளுவார்.

அயோத்தியைதலை நகராகக் கொண்டு கோசல நாட்டை நீதி தவறாமல் தசரத சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். குடிமக்களின் நன்மை ஒன்றையே பிரதானமாக எண்ணுபவன் தசரதன். அவனுடைய ஆட்சியில் மழை பொய்ப்பதில்லை. பஞ்சம், பட்டினி தலை காட்டுவதில்லை. மக்கள் சுபீட்சமாக வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு சமயம் சோதிட வல்லுநர்கள் சபைக்கு முகம் வாடியபடி வந்தார்கள். மன்னன் காரணம் கேட்டான். மாமன்னா விரைவில் சனி பகவான் கார்த்திகை நட்சத்திரத்தில் இருந்து ரோகினி நட்சத்திரத்தில் பிரவேசிக்கப் போகின்றார்.

ரோகினியின் அமைப்பு அம்பின் முனைபோல் அடிப்பாகம் விரிந்தும் முனைப்பாகம் குவிந்தும் இருக்கும். சனீஸ்வரர் விரிந்த பகுதியில் பிரவேசித்து குவிந்த பகுதியை பிளந்து கொண்டு சென்றால் நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் மழை பொழியாது. பஞ்சம் பட்டினி தலைவிரித்தாடும். கொடிய நோய்கள் தோன்றும். மக்கள் கூட்டம் கூட்டமாக மடிவார்கள். இதை எப்படி தடுப்பது என்பதே எமது கவலை என்று கூறினார்கள்.


சனீஸ்வரன் இந்தச் சஞ்சாரத்தை தடுத்தால்தான் மக்கள் பஞ்சம், பட்டினியில் இருந்து காப்பாற்றலாம் என சக்கரவர்த்தி, சோதிடர்கள், முனிவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். கடைசியாக குருவான வசிஷ்டர் சொன்னார் மாமன்னா சனீஸ்வரரின் சஞ்சாரத்தை தடுப்பது இயலாத காரியம். சர்வ வல்லமையுடைய சனீஸ்வரன் நீதிமான். அநாவசியமாக எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டார். அவருக்கு இட்ட கட்டளைப்படி தான் நடந்து கொள்வார்.

ஆனால் அவரை சந்தித்து வணங்கி வேண்டினால் வேண்டிய வரம் அளித்து அருள்வார். வசிஷ்டரையும் மற்றைய முனிவர்களையும் அறிஞர்களையும் வணங்கி விடைபெற்ற தசரதர் சனீஸ்வரருடைய உலகத்தை அடைந்து தனது வில்லில் நாணேற்றி சங்காரம் செய்தார். நாணின் ஒலி கேட்டு சனீஸ்வரர் வெளிப்பட்டார். எதிரே தசரத சக்கரவர்த்தி வில்லேந்தி நிற்பதைக் கண்டு அவர் வந்த காரணத்தை அறிந்தார்.

மாமன்னா சுயநலம் கருதி என்னை எதிர்க்க வரவில்லை. அது தெரியும். ஆனால் நீ என்னை நேரிடையாக வந்து சந்தித்து விபரம் சொல்லியிருக்கலாம். என்ன வேண்டும் சொல் தருகின்றேன் எனக்கூறினார். தசரதர் வில்லை தேரில் போட்டார். தேரிலிருந்து கீழே இறங்கி வந்து சனீஸ்வரனை மூன்று முறை வலம் வந்து அடிகளில் பணிந்து எழுந்து நின்று கரம் குவித்து துதி செய்தார். தோத்திர பிரியரான சனீஸ்வரன் மகிழ்ந்து வரம் கேள் தருகின்றேன் என்றார். தசரதன் மீண்டும் பணிந்து கரம் குவித்து நீங்கள் கார்த்திகையில் இருந்து ரோகினி நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் போது நாட்டில் பஞ்சம், பட்டினி, மரணம் போன்றவை ஏற்படாமலும் வானம் பொய்க்காமலும் மக்கள் குறைவின்றி சுபீட்ச்சமாக வாழ வேண்டும் என வரம் வேண்டினார்.

கருணை வள்ளலான சனீஸ்வரன் "தசரதன்" உன் விருப்பப்படியே நடைபெறும். கவலையின்றி வாழ்வார்கள் எனக் கூறி எனக்கு பிரியமான சனிக்கிழமையில வன்னி பத்திரத்தால் என்னை அர்ச்சித்து ஏழை எளியவர்களுக்கு இயன்ற தான தர்மத்தை செய்கின்றனரோ அவருக்கு என்னால் எந்தத் தீமையும் ஏற்படாது. அவர்களுக்கு சௌபாக்கியம் உண்டாகும் என்றார். தசரதன் மகிழ்ந்து சனீஸ்வரரிடம் விடை பெற்றுச் சென்று இன்று புரட்டாதிமாத இரண்டாவது சனியாகும். நாமும் வன்னி பத்திரத்தால் அர்ச்சித்து இன்புறுவோமாக...

**சிவனடியான்**



# சஜித்திற்கு சரத் ஆதரவு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு ஆதரவாகச் செயற்படவுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் சில நிபந்தனைகளை விதித்திருப்பதாக அறிந்ததாகவும் எனினும் அந்த நிபந்தனைகளுக்கு சஜித் இதுவரை பதிலளிக்கவில்லை என தனக்கு அறியக் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் கட்சியின் தீர்மானத்திற்கு அமைய சஜித்திற்கு ஆதரவளிப்பதாகவும் வெற்றி கிடைப்பது தொடர்பில் தனக்கு உறுதியாகக் கூற முடியாது எனவும் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி.மேலும் தெரிவித்தார். (இ-7)

# நிவாரணக் குழுக்கள் தொடர்ந்தும் சேவையில்



(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர நிலைமைகளுக்கு உதவும் வகையில் கடற்படை நிவாரணக் குழுக்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றன.

அதன்படி, பாதிக்கப்பட்ட மக்களை மீட்க 24 நிவாரணக் குழுக்கள் மற்றும் 13 டிங்கி படகுகள் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மேலும், காலி மாவட்டத்தில் தெல்கஹதொட பகுதியில் பொல்அதுமோதர ஆற்றுக்குக் குறுக்காக ஒரு மரம் விழுந்து கழிவுகள் குவிந்ததால், வடிகால் தடைப்பட்டு, அந்தப் பகுதி வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தில் இருந்தது.

எனவே, வடிகாலை சீர்படுத்த கடற்படையின் நிவாரணக் குழுக்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தன.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க கடற்படை நிவாரணக் குழுக்கள் களமிறக்கப்பட்டதுடன் கடற்படையினர் இந்த நடவடிக்கைகளை தொடர்ந்து கவனித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எல்பிட்டிய தேர்தலுக்கு எதிரான மனு நிராகரிப்பு

(கொழும்பு)

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை நடத்துவதை நிறுத்தி வைக்குமாறு கோரிக்கை விடுத்து, உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு நிராகரிக்கப்பட்டது.

குறித்த பகுதியைச் சேர்ந்த மூவர் இணைந்து தாக்கல் செய்த மனு, புவனேக அலுவிஹார மற்றும் காமினி அமரசேகர ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த மனுவை மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் விசாரணைக்கு உட்படுத்தும் என, உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, விஜித் மலல்கொட, ப்ரீதி பத்மன் சூரசேன மற்றும் காமினி அமரசேகர ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீண்ட பரிசீலனையின் பின்னர் குறித்த மனுவை விசாரணைக்கு எடுக்க போதுமான சட்ட காரணங்கள் இல்லாததால் மனுவை நிராகரித்து மூவரடங்கிய நீதிபதி கள் குழாம் தீர்ப்பளித்தது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் மற்றும் எல்பிட்டிய பிரதேச சபைக்கு பொறுப்பான தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோர், பிரதிவாதிகளாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டனர்.

தேர்தல்கள் ஆணைக் குழு கூடாமல் தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுவதாகவும் மனுதாரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

# ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு; காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேருக்கு மறியல் நீடிப்பு

(காத்தான்குடி)

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மட்டு. காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 63 பேரையும் தொடர்ந்து எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி. றிஸ்வான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

குறித்த குண்டுத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் சஹ்ரான் தலைமையிலான பயங்கரவாதிகள் மேற்கொண்டனர். இந்தச் சம்பவத்தையடுத்து காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 63 பேரை சஹ்ரானின் அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற மற்றும் அந்த அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று கூறி கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட 63 பேரும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு நீதவான் ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# கசிப்பு வைத்திருந்த இருவர் கைதாகி தலா ஒருஇலட்சம் ஆட்பிணையில் விடுவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரி திணைக்களப் பொறுப்பதிகாரி இந்திக்க பிரியசாந்த தலைமையிலான அணியினரின் சுற்றிவளைப்பில் கெருடாவில் பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் கசிப்புடன் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது ஒரு நபரிடமிருந்து 600 மில்லி லீற்றரும் கசிப்பு, மற்றவரிடமிருந்து 550 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டன.

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் பற்றையான ஆள் நடமாட்டம் குறைந்த இடத்தில் கசிப்பு அருந்திக் கொண்டு இருந்த போதே கடந்த புதன் கிழமை இரவு 8.30 மணியளவில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்படுத்தப்பட்ட போது குற்றப் பத்திரம் வாசிக்கப்பட்டு குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இந்நிலையில் இருவரும் தலா ஒரு இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1842

Search for people, places and things

### நேத்ரா

பெற்றோல் விலையை ஏத்தினா 3-4 ரூபா ஏத்துறாங்க... இறக்கினா 1-5 ரூபா இறக்கிறாங்க! மனச்சாட்சி இல்லையா உங்களுக்கு




### சங்கீதா

சில விடயங்களை மறந்து விடும் பாக்கியம் எல்லோருக்கும் எளிதில் கிடைப்பதில்லை



### சியாமளா

நம்மைப் பற்றி யார் என்ன நினைத்தால் நமக்கு என்ன? எம்மைப் பற்றி நாம் அறியாததையா அவர்கள் அறிந்திடப் போகிறார்கள்




### சிவகுமார்

பொய்யான மனிதர்கள் நிழலில் வாழ்வதைவிட உண்மையின் தனிமையில் வாழ்ந்துவிடலாம்



### பிரபாகர்

காலக்கொடுமை




### வைஷ்ணவி


இருளில் இருக்கின்றேன் என்ற கவலைப்படாதே... இருளும் விடியலை நோக்கித்தான் செல்கிறது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## சிறந்த தமிழ் அறிஞராகப் போற்றப்படும்

# வித்துவான் வேந்தனார்



ஈழத்து இலக்கிய வரலாற்றில் மரபுவழித் தமிழ் புலமையாளர்களுள் சிறந்த தமிழ் அறிஞராக விளங்கியவர் வித்துவான் க.வேந்தனார். பழந்தமிழ் இலக்கியத்திலும் பாரதியார் போன்ற நவயுகக் கவிஞர்களிடத்திலும் பற்றும் ஆர்வமும் மிக்கவராக இவர் திகழ்ந்தார். சங்கத் தமிழ் இலக்கியங்களை ஆழமாகக் கற்று அவற்றின் உட்பொருளை எளிய நடையில் சமூகத்துக்கு வழங்கிய பெருமை இவருக்குண்டு. பாவேந்தன் பாரதியின் பாடல்களிலுள்ள நுட்பங்களை மிக அழகாக ஆராய்ந்து எடுத்துரைத்தவர்.

1918 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி வேலணையில் பிறந்த வித்துவான் வேந்தனார் 1966 ஆம் ஆண்டு செப்டெம்பர் 18 ஆம் திகதியன்று அகவை நாற்பத்தெட்டில் இம் மண்ணை விட்டுச் சென்றுவிட்டார். ஈழத்து அறிஞர்களிடமும் இந்திய அறிஞர்களிடமும் கற்கும் வாய்ப்புப் பெற்ற இவர் சிறந்த சொற்பொழிவாளராக எம் மண்ணில் திகழ்ந்தவர். இயல்பாகவே இலக்கண வரம்பில் நின்று பாக்களை இயற்றும் ஆற்றல்பெற்ற வேந்தனார், தன் வாழ்நாளில் அருமையான கவிதைகளை இந்த அவனிக்கு வழங்கிவிட்டுச் சென்றுவிட்டார்.

ஆசிரியராக, எழுத்தாளராக, தமிழ் ஆய்வாளராகத் திகழ்ந்த இவர், இம்மண்ணில் பிறந்த நூற்றாண்டு குறித்து கடந்த ஈராண்டுகளாக தமிழ் உலகம் அவரைப் பற்றி நீளநினைந்து சிந்திப்பது பெருமைக்குரிய விடயமாகும். வேந்தனார் எழுதிய கட்டுரைகள், கவிதைகள், இந்து சாதனம், ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் அவரது காலத்தில் வெளிவந்தமையும் அவரது ஆக்கங்களின் ஆழத்தை இன்றும் ஆச்சரியமாகப் படிப்பவர்களைச் சிந்திக்க வைப்பதையும் உணர முடிகிறது.

யாழ்.பல்கலைக்கழகமாக இன்று விளங்கும் திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரியில் அன்று ஓர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை சிறப்பாக இயங்கியது. அங்கே இந்திய மேதாவிகளும் ஈழத்து அறிஞர்களும் ஒருங்கே கற்பித்தனர். அவர்களிடம் மிக இளம் வயதில் கற்கின்ற வாய்ப்பு பெற்றவர் வேந்தனார். அக்காலத்திலேயே பேரறிஞர்களின் பாராட்டைப்பெற்று விளங்கினார். தமிழ் அறிஞர் நவநீதகிருஷ்ண பாரதியாரிடம் கற்ற இவர், சேர் பொன்.இராமநாதனின் மருகர் சு.நடேசபிள்ளை நடத்திய தமிழ் விழாவில் இளம் கவிஞராகப் பங்குபற்றி பாராட்டைப் பெற்றவர். பரமேஸ்வராக் கல்லூரியில் கம்ப இராமாயணத்தை ஐயம்திரிபுறக் கற்றதினால், இராமாயண உரைகளை சிறப்பாக எழுதி வெளியிடும் பாக்கியம் பெற்றார்.

இவர் எழுதிய மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேயி சூழ்வினைப் படலம் ஆகிய நூல்கள் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பேருதவியாக அமைந்தது என்பதனை மறுக்க முடியாது. கல்விப் பொதுத் தராதரப் சாதாரணதரப் பரீட்சைக்கு வித்துவான் வேந்தனாரின் மேற்குறித்த நூல்களைக் கற்றவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். கற்பித்தல் பணியில் ஈடுபட்ட நிறுவனங்கள் வேந்தனாரின் படைப்புக்களை அச்சேற்றி வெளியிடுவதில் அன்றைய காலத்தில் மிகவும் ஆர்வம் காட்டியிருந்தன. அதன் விளைவாக குறுகிய காலத்தில் வேந்தனாரின் படைப்புகள் பல வெளிவந்தன.

வேந்தனாரின் கவித்துவம் மிக ஆழமானதாக அறியப்பட்டாலும் குழந்தைகளுக்காக இவர் படைத்த மழலைப் பாக்கள் உணர்வுபூர்வமானவை. இன்றும் அவை மழலைப் பள்ளிகளிலே உலாவி வருகின்றன. உதாரணமாக அம்மாவின் அன்பு எனும் தலைப்பில் வேந்தனார் படைத்த பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

**காலைத் தூக்கி கண்ணில்**
**ஒற்றிக்**
**கட்டிக் கொஞ்சும் அம்மா**
**பாலைக்காய்ச்சி சீனிபோட்டு**
**பருகத் தந்த அம்மா!**

**புழுதி துடைத்து நீரும்ஆட்டி**
**பூவும் சூட்டும் அம்மா**
**அழுது விழுந்த போதும்**
**என்னை**
**அணைத்து தூக்கும்அம்மா**

இப்பாடலை வெல்ல இதுவரை ஒரு குழந்தைக் கவிஞன் எம் மண்ணில் பிறக்கவில்லை. இந்தியாவில் பல குழந்தைப் பாடல் விற்பன்னர்கள் தோற்றம் பெற்றுள்ளார்கள். ஆனால் ஈழத்து வேந்தனாரின் கொஞ்சு தமிழ் கவிதைக்கு ஈடாக மழலைக் கவிதைகளை யாரும் படைக்கவில்லை என அமரர் சிவ.சரவணபவன் (சிற்பி) எடுத்துரைத்துள்ளார்.

வேந்தனாரைப் பார்த்து கவியரங்க மேடைகளுக்கு வந்தவர்கள் பலர். ஐம்பதுகளில் கவியரங்க மேடைகளில் வேந்தனாரை வாழ்த்தி, கவி சொல்லும் வழக்கம் இருந்துள்ளது. காரை சுந்தரம்பிள்ளை, சா.வே.பஞ்சாட்சரம், புலவர் பார்வதிநாதசிவம் போன்றவர்களின் கவியரங்கப் பாக்களில் வேந்தனார் வந்து போயுள்ளார். இவரின் கவிதை நூல்களுக்கு மிகப்பெரிய சான்றோர்கள் பாயிரம் பாடியுள்ளனர். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மைந்தன் சோ.இளமுருகனார், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோர் வேந்தனாரின் கவிதைத் தொகுப்புக்கு பாயிரம் பாடியிருப்பது பெருமைதரும் செய்தியாகும். நல்லைநகர் நாவலர் பெருமானுக்கு 'நாவலர்' விருது வழங்கிய திருவாவடுதுறை ஆதீனம், வேந்தனாருக்கு 'தமிழ் அன்பர்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கியமை ஒரு வரலாற்று அம்சமாகும்.

வேந்தனாரின் நூற்றாண்டு கால நினைவுகளை தமிழ்கூறும் நல்லுலகம் நினைவூட்டி வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. வேந்தனாரின் பிள்ளைகளுள் ஒருவரான திருமதி.கலையரசி சின்னையாவை அவுஸ்திரேலியா சிட்னியில் அரங்க நிகழ்ச்சிகளில் சந்திக்கும் வாய்ப்பு சிறியேனுக்கு கிடைத்தது.

வேந்தனாரின் படைப்புக்கள் சிலவற்றை வெளியிட்டதனால் கிடைத்த நிதியினை எங்கள் சிவபூமி முதியோர் இல்லத்திற்கு வழங்கிச் சிறப்பித்தமை மறக்க முடியாதது. வேந்தனாரின் மைந்தன் இளஞ்சேய் தனது தந்தையின் ஆக்கங்களை தனது உடன்பிறந்தவர்களுடன் இணைந்து ஆவணப்படுத்தி வெளியிடும் செயற்பாடு தமிழ் உலகுக்கு பெரும் பயனாக அமைந்துள்ளது.

காலத்தால் மறக்க முடியாத வேந்தனாரின் நூற்றாண்டு மலர் தமிழ் உலகில் ஒரு சிறந்த ஆவணமாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன்.

# திறன் வகுப்பறைத்திறப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் திறன்வகுப்பறைத் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கிருபாகரன், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5-30)

# செய்தித்துளிகள்

### அவன்கார்ட் விவகாரம்

## முன்னாள் கடற்படை அதிகாரி கைது

(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்துக்கு மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தை முன்னெடுத்து சென்று அரசாங்கத்துக்கு 1140 கோடி ரூபாய் நட்டத்தை ஏற்படுத்திய விவகாரம் தொடர்பில் முன்னாள் கடற்படை அதிகாரி விஸ்வாஜித் நந்தனா தியபலனகே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். குறித்த நபர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சிங்கப்பூரிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தபோது இவர் கைது செய்யப்பட்டார். (இ-7)

## சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர் பொது நூலகத்தால் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வாசிப்பு மாதத்தை (ஒக்டோபர்) முன்னிட்டு சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது. இச் சஞ்சிகைக்கு இப் பிரதேசத்திற்குட்பட்ட 18 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து பிரதேசத்தை மையப்படுத்தி எழுதப்படும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்கள் சொந்தமானதாகவும் பகுதி கிராம உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட்டும் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் "தவிசாளர்/செயலாளர், வலி.கிழக்குப் பிரதேசசபை புத்தூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. (இ-5)



**யாழ்.கொக்குவில் சத்யசாயி சேவா நிலைய அனுசரணையில் மாதம் தோறும் பௌர்ணமி தினத்தில் ஜே/88 புதிய சோனகதெரு முதியோர் சங்க உறுப்பினர்களுக்கு உணவுப் பொதி வழங்கப்படுகிறது.**

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)


ஐந்து மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீட்டிக்கப்பட்டது. களுத்துறை, கேகாலை, காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 140 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 280 | 300 |
| தக்காளி | 120 | 160 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| கோவா | 120 | 140 | 120 | 120 |
| கரட் | 100 | 120 | 120 | 120 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 |
| புடோல் | 140 | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 30 | 120 |
| பயற்றங்காய் | 180 | 280 | 200 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 160 | 140 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 80 | 160 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 | 100 |
| கீரை -1பிடி | 50 | 70 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 20-40 |
| இராசவள்ளி | – | – | 220 | – |
| வெங்காயப்பூ | 250 | 140 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 80 |




# நூலகத்தில் ஒரு பரீட்சை



குணசீலன் ஒரு பதிப்பாளர். அதாவது நூல்களை அச்சிட்டு வெளியிடுபவர். ஒரு நண்பர் மூலம் அவர் அறிமுகம் எனக்குக் கிடைத்தது.

ஒருநாள் அவர் அலுவலகத்துக்குச் சென்றிருந்தேன். அவர் தன்னுடைய நூலகத்துக்கு என்னை அழைத்துச் சென்றார். அவருடைய நூலகத்தில் அவர் வெளியிட்ட எல்லா நூல்களின் பிரதிகளையும் வரிசையாக வைத்திருந்தார். மொத்தம் 247 நூல்களை வெளியிட்டிருப்பதாகச் சொன்னார்.

"தமிழில் இருக்கும் 247 எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நூல் என்று கணக்கிட்டு வெளியிட்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே!" என்றேன் சிரித்துக்கொண்டே.

"நான் இன்னும் நூல் வெளியிடுவதை நிறுத்தவில்லையே! அதனால் என் நூல்களின் எண்ணிக்கை 247 ஐத் தாண்டிவிடும்!" என்றார் குணசீலன். தொடர்ந்து, "நூல்களின் பெயர்களையும் அவற்றை எழுதியவர்களின் பெயர்களையும் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு கேள்வி இருக்கிறது" என்றார்.

"பரீட்சை வைப்பீர்கள் என்று தெரிந்திருந்தால் நான் இந்த விளையாட்டுக்கே வந்திருக்க மாட்டேனே!" என்றேன் நான் விளையாட்டாக.

அவர் அறைக்கு வந்து அமர்ந்ததும் என்னிடம் கேட்டார் "இத்தனை நூல்களைப் பார்த்தீர்களே, அவற்றில் உங்களுக்கு நினைவிருக்கும் நூல்களின் பெயர்களையும் நூலாசிரியர்களின் பெயர்களையும் சொல்லுங்கள்" என்றார்.

வகையாக மாட்டிக்கொண்டோமே என்று நினைத்து, யோசித்து யோசித்து, பத்து நூல்களின் பெயர்களையும் மூன்று நூலாசிரியர்களின் பெயர்களையும் சொன்னேன்.

"ஒரு ஆச்சரியமான விடயம். இந்தக் கேள்வியை நான் இங்கே வந்த பலரிடமும் கேட்டிருக்கிறேன். எல்லோருமே ஏறக்குறைய நீங்கள் சொன்ன பெயர்களைத்தான் சொன்னார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது?"

"இங்கே வந்த எல்லோருமே என்போல் அறிவில் குறைந்தவர்கள்தான் போலிருக்கிறது" என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் சொல்லவில்லை. அவர் என்ன சொல்லப் போகிறார் என்று அறியக் காத்திருந்தேன்.

"இன்னோர் ஆச்சரியத்தையும் சொல்லி விடுகிறேன். நீங்கள் பத்து நூல்களின் பெயர்களைச் சொன்னீர்கள். மூன்று நூலாசிரியர்களின் பெயர்களையும் சொன்னீர்கள். இந்தப் பத்து நூல்களை எழுதியவர்கள் இந்த மூன்று பேர்தான் என்றார்."

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"உண்மையில் இது ஆச்சரியமான விடயமே இல்லை. எத்தனையோ பேர் எத்தனயோ நூல்களை எழுதுகிறார்கள். அவை நன்றாக விற்பனை ஆகலாம். அவை வெளியிடப்பட்ட காலத்தில் பாராட்டுகள் கூடப் பெற்றிருக்கலாம்.

ஆனால் காலத்தால் அழியாத நூல்கள் சில தான். இந்த நூல்கள் இவற்றை எழுதியவர்களின் மேன்மையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும்."

அவர் சொன்ன கருத்து எனக்குப் புரிந்தது. ஆனால் நல்ல வேளையாக அவர் 'இதிலிருந்து என்ன தெரிகிறது?' என்று கேட்கவில்லை! கேட்டிருந்தால், "என்னைப் போன்றவர்கள் நூல்கள் எழுதக் கூடாது என்று தெரிகிறது" என்று பதில் சொல்லி இருப்பேன்!


**குறள் 28:**

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

**பொருள்:**

உயர்ந்த கருத்துக்களைக் கூறிய சான்றோர்களின் பெருமையை இவ்வுலகில் நிலைத்து நிற்கும் அவர்களது சொற்களே (விட்டுச் சென்ற நூல்கள், கருத்துக்கள், அறிவுரைகள்) எடுத்துக் காட்டும்.

## குட்டை குட்டை கத்தரிக்காய்



குட்டை குட்டை கத்தரிக்காய்
குண்டு குண்டாய் சுண்டங்காய்
நெட்டை நெட்டை முருங்கைக்காய்
நீண்டு தொங்கும் புடோலங்காய்

சட்டிபானை போலவே
தடித்திருக்கும் பரங்கிக்காய
பட்டை போட்ட வேப்பங்காய்
பச்சை நிற பாகற்காய்

செட்டையில்லா சுரைக்காய்
செக்கும் நல்ல தக்காளி
கொடியில் தொங்கும் அவரைக்காய்
கொவ்வை நிற மிளகாய்

வாட்ட் சாட்ட வாழக்காய்
வந்துபார் என் தேர்ட்டத்தில்
வந்துபார் என் தோட்டத்தில்

## பழமொழிகள்

- முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ?
- சம்பளம் இல்லாத சேவகனும், கோபமில்லாத எசமானும்.
- தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டை சுடும்.
- நல் இணக்கமல்லது அல்லல்படுத்தும்.
- அழுதாலும் பிள்ளை அவளே பெற வேண்டும்.
- சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடி.
- ஆடு கொழுக்கிறதெல்லாம், இடையனுக்கு இலாபம்.

## விடுகதைகளும் விடைகளும்

- ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?

**பற்கள்**

- வெள்ளி ஓடையில கறுப்பு மீனு துள்ளி விளையாடுது?

**கண்**

- மருத்துவர் வந்தாரு, ஊசி போட்டாரு, காசு வாங்காமல் போனாரு அவர் யார்?

**நுளம்பு**

- ஊரெல்லாம் சுத்துவான், ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான் அவன் யார்?

**செருப்பு**

- வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை அது என்ன?

**உழுந்து**

- தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்க முடியாது அது என்ன?

**முதுகு**

- பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார்?

**சீப்பு**

- ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம் அது என்ன?

**உள்ளங்கையும் விரல்களும்**

இப்போதைய ஒரு சிறு முடிவு, உங்களுடைய நாளைய அனைத்தையும் மாற்ற முடியும்.
- ஹரோல்ட் ஷீல்லெர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கிடைத்த சந்தர்ப்பம் இம்முறையும் சறுகுமா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய மான மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுவது உறுதியாயிற்று.

பொதுஜன பெரமுன சார்பில் கோத்தபாய ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன் னணி (ஜே.வி.பி) சார்பில் அநுரகுமார திஸா நாயக்க ஆகியோர் போட்டியிடுவது உறுதி யாயிற்று.

மாறாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணி சார்பில் யார் போட்டியிடுவார் என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் மிகவும் நெருக்கமானவர்கள் என்ற அடிப்படையில்,

ஜனாதிபதி மைத்திரி தனது ஆதரவை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கினால்கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.

ஏனெனில் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதி பதித் தேர்தலில் வெற்றி பெற்றால்,

தனக்கான பாதுகாப்பு எவ்வாறாக இருக் கும் என்ற கோணத்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன சிந்திக்கத் தலைப்படுவார்.

இந்நிலையில் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பது தமக்கு ஆரோக்கியமானது என்ற முடிவை ஜனாதிபதி மைத்திரி எடுக்கலாம் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தனது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது என்ற தீர் மானத்துக்கு வரலாம்.

இங்கு பிரதான கட்சிகள் சார்பில் பிரபல மானவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிட்டால் சிங்கள வாக்குகள் பிரிந்து போகும்.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவர் என்பதை சிறுபான்மை இன மக்களின் வாக்குகளே தீர்மானிக்கப் போகின்றது.

ஆக, சிறுபான்மை இன மக்கள் அதிலும், சிங்களப் பேரினவாதத்தாலும் பௌத்த பயங் கரவாதத்தாலும் நசியுண்டு போயுள்ள தமிழ் மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வரா என்பது தான் முதலாவது கேள்வி.

கடந்த காலங்களில் அதாவது யுத்தம் முடி வுற்ற 2009ஆம் ஆண்டுக்குப் பின்பு தமிழ் மக்கள் பேரம் பேசக்கூடிய மிக முக்கியமான சூழ்நிலைகள் ஏற்பட்டன.

இருந்தும் அவற்றைத் தமிழ் அரசியல் தலைமை தவறவிட்டது மட்டுமன்றி தீர்வு கிடைக்கும் தீர்வு கிடைக்கும் என்று நம்பி நம்பி காலத்தையும் கடத்தி, சொந்த நிலத்தையும் சுயகௌரவத்தையும் இழக்கின்ற துர்ப்பாக் கிய நிலைமை ஏற்பட்டது.

இந்த அவலமான நிலையில் இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அதுதான் ஜனாதிபதித் தேர்தல். இந்தத் தேர்தலில் தமிழ் அரசியல் தரப்புகள் யாரை ஆதரிக்கப் போகின்றன என்பதற்கப்பால்,

யாரை ஆதரித்தால், தமிழினத்துக்கு விமோ சனம் கிடைக்கும் என்று பார்க்க வேண்டும்.

இது விடயத்தில் அனைவரும் ஒன்றுபட்டு ஏகோபித்த தீர்மானத்தை எடுப்பதுதான் இந் தச் சந்தர்ப்பத்தையேனும் நழுவவிடாமல் பயன்படுத்துவதற்கான ஒரே வழியாகும்.

# ரணில் செயற்திறமையற்ற தலைவர் என்பதை ஐ.தே.கவின் செயற்குழு உறுதிப்படுத்தியுள்ளது

## திலங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க செயற்றிறமையற்ற தலை வர் என நாங்கள் தெரிவித்து வந்ததை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறு திப்படுத்தியுள்ளது என ஐக் கிய மக்கள் சுதந்திர முன் னணியின் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதி பால தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடக மத் திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் மேற்கண்ட வாறு சுட்டிக்காட்டினார்.

அத்துடன் ரணில் விக்கி ரமசிங்க நாட்டின் முதல் பிரஜையான ஜனாதிபதியாக முடியாது என்பது உறுதி யாகியுள்ளது. அவர் ஜனா திபதியானால் நாட்டின் ஒற் றையாட்சி, இறையாண் மைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் தற்போது மக்க ளுக்கு இல்லாமல்போயுள் ளது.

ரணில் விக்கிரமசிங்க எப்போதும் மேற்கத்திய நாடு களின் கொள்கை மற்றும் அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவகையில் தீர்மான ங்களை நிறைவேற்றக் கூடியவராக இருந்து வந் திருக்கின்றார்.

கடந்த காலங்களில் அவர் மேற்கொண்ட தீர்மானங் கள் நாட்டுக்கு பாதிப்பாகவே இருந்துள்ளன. அதனால் அவர் நாட்டின் ஜனாதிபதி யாக வரமாட்டார் என்பது தற்போது உறுதியாகியிரு ப்பது மகிழ்ச்சியளிக்கின் றது. அத்துடன் இது நாட்டு மக்களுக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும் என் றும் அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

## எதிர்வரும் வாரங்களில் முக்கிய மாற்றங்கள்

# சஜித்தின் அழைப்பை ஏற்று மீள ஐ.தே.கவில் இணைந்த திஸ்ஸ

## தயாசிறிக்கு அழைப்பு

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ ஜனா திபதி வேட்பாளரானால் இணைந்து செயற்பட முடி யும் என எதிர்க்கட்சி (மகிந்த அணி) உறுப்பினர்கள் பலர் தன்னிடம் கூறியதாக தெரி வித்த ஐக்கிய தேசியக் கட்சி யின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க, அடுத்த மூன்று நான்கு வாரங்களில் முக் கியமான மாற்றங்கள் பல இடம்பெறும் என்றும் தெரி வித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் அழைப்பை ஏற்று மீண்டும் ஐக்கிய தேசி யக் கட்சியுடன் இணைந் துள்ள கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க நேற்றுக் கொழும் பில் நடத்திய ஊடகவியலா ளர் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

சஜித் எனக்கு விடுத்த அழைப்பிற்கு அமைய கட்சி யின் குறைபாடுகளை இனங் கண்டு கட்சியை முன்னோ க்கிக் கொண்டு செல்வதே எனது கடமை.

அரசியல் காரணிகளுக் காக எம்மை விட்டு விலகிச் சென்றவர்களை மீண்டும் இணைப்பதே எனது கடமை. எனது கடமையை நான் சரி யாகச் செய்து முடிப்பேன்.

இப்போது எமக்குள்ள பிரதான இலக்கு என்ன வென்றால் சஜித் பிரேமதா ஸவை ஜனாதிபதியாக்கு வதே.

அவர் இளம் தலைவர். ஆகவே அவரால் சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும். ஆகவே அதனை இலக்கா கக் கொண்டே நாம் செயற் பட வேண்டும். இப்போது ள்ள நேரத்தில் எமக்குள்ள வேலைத்திட்டம் என்ன வென்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறிய தயாசிறி ஜெயசேகர போன்றவர்கள் மற்றைய அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன். அவர்களும் எம்முடன் கை கோர்க்க வேண்டும்.

சஜித் பிரேமதாஸ வேட் பாளரானால் இணைந்து செயற்பட முடியும் என எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலர் என்னுடன் பேசினார்கள். அடுத்த மூன்று நான்கு வாரங் களில் முக்கியமான மாற் றங்கள் பல இடம்பெறும்.

இது அரசியல் கட்சி மாறு தல்கள் அல்ல, நாட்டுக்காக கைகோர்க்கும் நடவடிக் கைகள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பிறர் என்னைப் புகழவேண்டும், மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. அத னால் ஏமாற்றமே உண்டாகும். " பிறர் எனக்கு அதிக மதிப்பு மரியாதை தரவேண்டும்" என்று அதிகாரத்தோடு கேட்பதும் தவறு.

-தயானந்த சரஸ்வதி

## அடிப்படை உரிமை மீறல்

# வைத்தியர் ஷாபியின் மனு விசாரணை அடுத்த வருடத்திற்கு ஒத்திவைப்பு

(குருநாகல்)

குருநாகல் வைத்திய சாலை வைத்தியர் மொஹ மட் ஷாபியின் அடிப்படை உரிமை மனு மீதான விசார ணையை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டதை எதிர்த்து குருநாகல் வைத்தியர் ஷாபி தாக்கல் செய்த மனு நேற்று வெள்ளிக்கிழமை உயர் நீதி மன்றத்தில் இரண்டு உறுப் பினர்களைக் கொண்ட நீதியர சர்கள் அமர்வு முன் விசார ணைக்கு வந்தது.

நேற்று இடம்பெற்ற விசார ணையின்போது எதிர்காலத் தில் மேலும் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாக சட்டமா அதிபர் திணைக்க ளத்தால் அறிவிக்கப்பட்டதை யடுத்தே வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

பெண்களுக்கு சட்ட விரோதமாக கருத்தடை செய் தல், சட்டவிரோதமாக சொத் துக்களை வாங்குதல் மற்றும் பயங்கரவாத குற்றச்சாட்டு க்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட அவர், பின்னர் அதற்கான ஆதாரங்கள் போதி யளவில் இல்லாதமையினால் கடந்த ஜூலை பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தன்னை கைது செய்தது தடுத்து வைத் திருந்தது சட்டவிரோதமானது என தெரிவித்து வைத்தியர் ஷாபி அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்திருந் தார்.

இந்த மனுவின் பிரதி வாதிகளாக குருநாகல்பொலிஸ் பொறுப்பதிகாரி, குற்றத்தடுப்பு விசாரணை பிரிவின் பணிப் பாளர்மற்றும்பதில்பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன ஆகியோர் பெயரிடப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- பூமியிடம் இருந்து பொறுமையைக் கற்று கொள்ளுங்கள். உங்கள் காலடியில் உலகமே பணிந்து நிற்கும்.
- எல்லா வகையிலும் விரிவடைய முயற்சி செய்யுங்கள். உயிர் இருப்பதன் ஒரே அறிகுறி வளர்ச்சியடைவது தான்.
- இடைவிடாமலும், பற்றில்லாமலும் பணியில் ஈடுபடுங்கள். நல்ல பணிகள் உங்களை அடையாளம் காட்டும்.
- வெறும் கோழையாகவும், கபடதாரியாகவும் இருக்க வேண்டாம். உண்மையின் பாதையில் கண்ணியத்துடன் சென்று கொண்டிருங்கள்.


## பிள்ளையார் ஆலய வளாகத்தில் பிக்குவின் உடல் தகனம்

# மதங்களின் புனிதத்தைக் கெடுக்காதே!

### ஆளுநர் அலுவலகம் முன் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம்












(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் வளாகத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி பிக்குவின் உடலைத் தகனம் செய்தமை மற்றும் தமிழ்ச் சட்டத்தரணிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சிவில் அமைப்புக்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை வடமாகாண ஆளுநரின் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகாமையிலுள்ள அலுவலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போரட்டத்தின் போது "இலங்கை அரசே சட்ட ஆட்சி பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்து, அனைத்து விதமான இனத்துவ பராபட்சங்களையும் ஒழித்திடு, சிறுபான்மையினர் மீதான அடக்குமுறைகளை நிறுத்து, மதங்களின் புனிதத்தைக் கெடுக்காதே, நீதி பீதியில் அநீதி வீதியில் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு-கிழக்கு சிவில் அமைப்புக்கள், கிறிஸ்தவ மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (இ-30)

## SLT Speedup சைக்கிள் சவாரியின் 4 ஆம் நாள் திருகோணமலையில் நிறைவடைந்தது

SLT Speedup சைக்கிள் சவாரி நான்காம் நாள் பந்தயம் 27 ஆம் திகதி நேற்று குருநாகலில் இருந்து ஆரம்பமாகி திருகோணமலையில் நிறைவடைந்தது. போட்டி வாரியபொல வழியாக தம்புத்தேகம, அநுராதபுரம், மதவாச்சி, வவுனியா ,கெப்பிற்றிகொல்லாவ ,மொரவெவ ஊடக பயணித்து 241 கி.மீ. தூரத்தைக் கொண்டதாக திருகோணமலையை அடைந்தது.

பெண்களுக்கான போட்டி கொழும்பு SLT அலுவகைம் முன்பாக ஆரம்பமானது.

SLT குழுமத் தலைவர் குமாரசிங்க சிறிசேன போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

இச்சந்தர்ப்பத்தில் SLT பிரதம நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா,பிரதான செயற்பாட்டு அதிகாரி பிரியந்த பெர்னாண்டஸ்,பிரதான விற்பனை அதிகாரி பிரபாத் தஹநாயக்க, SLT மனிதவள அதிகாரி இந்திராணி ஹிஸ்ஸவல உட்பட SLT சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் விசேட அழைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

முதற்கட்டமாக நேற்று 90 கிலோ மீற்றர் தூரத்தை கடந்து குருநாகலை சென்றடைந்தது. சைக்கிளோட்டப் போட்டியின் இறுதி நாள் ஆண்கள் போட்டி இன்று திருகோணமலையில் ஆரம்பித்து தம்புள்ளையில் நிறைவடையும்.

பெண்கள் போட்டி இன்று




குருநாகலில் ஆரம்பித்து கலேவலை ஊடான தம்புள்ளையை வந்தடையும்.

அதே போன்று முதற் தடவையாக நடைபெறும் கனிஷ்ட பிரிவுப் போட்டி இன்று தம்புள்ளையில் ஆரம்பித்து ஹபரன, கெக்கிராவ ஊடாக பயணித்து மீண்டும் தம்புள்ளையை வந்தடையும். (க)

## இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கிராஞ்சி செல்சிற்றி அணி



மல்லாவி இளம்புயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கிராஞ்சி செல்சிற்றி அணியை எதிர்த்து கனகபுரம் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் செல்சிற்றி அணி வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

செல்சிற்றி அணி சார்பாக சதுர்சன், கௌதமன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத் தனர். (க)




45 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கபடிப் போட்டியில் வடமாகாண பெண்கள் அணி மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

## பரபரப்பான ஆட்டத்தில் வென்றது யுனிபைட் அணி



சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கிராஞ்சி செல்சிற்றி அணியை எதிர்த்து வவுனியா யுனிபைட் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் யுனி பைட் அணி 01 : 00 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

## முறையான சட்டம்...

வக்கும், வாக்குப் பெட்டிகளை கொளுத்தும் அளவுக்குச் சென்றுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

உண்மையில், இவ்வாறான கலாசாரங்களை தடுக்க இலங்கையில் இன்னும் முறையான சட்டதிட்டங்கள் இல்லை என்றே கூறவேண்டும்.

இலங்கையிலுள்ள சட்டங்கள், இவ்வாறான குற்றச்செயல்களை தேர்தல் குற்றமாகவும், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய வழக்குத் தாக்கல் செய்யக்கூடிய குற்றமாகவும்தான் கருதுகின்றன.

இதனால், இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நீதிமன்றின் ஊடாக, தண்டனை கிடைப்பதும் குறைவாகவே இருக்கிறது.

அத்தோடு, வாக்குப்பெட்டியை உடைத்த நபருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையே கிடைக்கிறது.

இதனால், வாக்குப்பெட்டியை உடைத்தவர் தண்டனையிலிருந்து தப்பித்து, மீண்டும் தேர்தலில் களமிறங்கி வெற்றி பெற்று, அதிகாரத்திற்கும் வரக்கூடிய நிலைமையே இங்கு காணப்படுகிறது

இவைதான் சுதந்திர தேர்தலுக்கு தடையாக இருக்கிறது. நீதியை நிலைநாட்ட எடுக்கும் காலமும், சட்டத்திட்டங்களை உரியவகையில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கலும்தான் இவற்றுக்கு எல்லாம் காரணமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## எவ்வித நிபந்...

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டமை தொடர்பில் கேகாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் வஜிர அபேவர்தனவும் கலந்து கொண்டிருந்தார்.(ம-3)

## கோத்தாவை...

சில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களின் ஏகமனதான விருப்பத்துடனேயே ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டுள்ளார். பங்காளி கட்சிகளும் சஜித்துக்கு ஆதரவாகவே செயற்படுகிறார்கள். சஜித் வேட்பாளராக களமிறங்குவதற்கு எந்த நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## மயங்கி விழுந்த...

7.30 மணியளவில் கொடிகாமம் மடத்தடி ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த தம்பிஜயா இராசேந்திரம் (வயது-69) என்பவரே மரணமடைந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,114)

## மன்னாரில் இன்று...

தெரிவிக்கையில்,

மாபெரும் சைவ எழுச்சி மாநாடு இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மதியம் 12 மணிவரை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு நடராஜப் பெருமானின் திருவுருவச் சிலை ஏந்தியவாறு எழுச்சி பேரணியானது மன்னார் பிரதான பாலத்தில் இருந்து ஆரம்பமாகி மன்னார் நகர மண்டபத்தை வந்தடையும்.

அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு சைவ எழுச்சி மாநாடு இடம்பெறும்.குறித்த மாநாட்டுக்கு ஈழத்தின் பிரபல பேச்சாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவரையும் கலாசார உடையில் கலந்து கொள்ளுமாறு மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் தலைவர் சிவசிறி மஹா தர்மகுமார குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-3,285)

## குடும்பப் பெண்...

மன்னார் சிலாவத்துறை முத்தரிப்புத்துறையை சேர்ந்த சுகந்தி குறூஸ் (வயது-32) என்ற நான்கு பிள்ளைகளின் தாயே மேற்படி உயிரிழந்தவர் ஆவார்.

மனைவி தீயில் எரிவதை கண்ட மதுபோதையில் இருந்த கணவன், மனைவியினை கட்டிப்பிடித்து தீயினை அணைக்க முற்பட்டுள்ளார். இருவரும் பலத்த தீக் காயங்களுக்கு உள்ளான நிலையில் அயலவர்களினால் காப்பாற்றப்பட்டு சிலாவத்துறை பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மனைவி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கணவன் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் தொடர்ந்து அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,9)

## சஜித் எமக்கு...

மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவின் நியமனம் எவ்வாறான சவாலாக அமையும் என்ற கேள்விக்கு எந்த சவாலும் இல்லை இது நாங்கள் எதிர்பார்த்தது தான் என தெரி வித்துள்ள மகிந்த ராஜபக்ஷ சஜித் பிரேமதாஸ போட்டியிட வேண்டும் என்பதே எப்போதும் எனது கருத்து எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அப்படியானால் சஜித்தால் வெல்ல முடியாதா? என கேள்வி எழுப்பிய ஊடகவியலாளரிடம் உங்களிற்கு என்ன பைத்தியமா? தனது திஸ்ஸமகராம அம்பாந்தோட்டை தொகுதிகளிலேயே வெல்ல முடியாத ஒருவரால் எப்படி முழு நாட்டிலும் வெல்ல முடியும் என மகிந்த ராஜபக்ஷ பதில் கேள்வி எழுப்பியுள்ளார். (ம-3)

## பாது...

வைத்துக் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்டு 8 வருடங்கள் கடந்த நிலையில் குறித்த இருவருக்கும் என்ன நடந்தது என்று இதுவரை தெரியாத நிலையில்அவர்களது உறவினர்களால் யாழ் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு இடம்பெற்று வருகிறது.

குறித்த வழக்கில் 3 தடவைகள் மன்றில் ஆஜராகுமாறு நீதவானால் திகதியிடப்பட்டும் நேற்றைய தினம் மூன்றாவது தடவையாகவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தா வரவில்லை.

இரு தடவைகள் வழக்கிற்காக ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டபோதும் தனது உடல் நிலையைக் காரணம் காட்டி வரவில்லை நேற்றைய தினம் இடம்பெற்ற வழக்கிற்கு தான் யாழ்ப்பாணம் வருவதற்கு பாதுகாப்பு இல்லை என மன்றில் தெரிவித்தார்.

இவ்வாறு தெரிவிக்கும் கோத்தா எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவுள்ள நிலையில் எவ்வாறு யாழ்ப்பாணம் வரப்போகிறார் எனக் குமார் குணரட்ணம் கேள்வி எழுப்பினார். (ம-3.10.101)

## இதை ஏற்காதவர்...

நான் இங்கு ஒரு கேள்வி எழுப்புகிறேன். தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சிங்களம் தெரியாததமையால், எமக்கும், எமது மொழியை பேச முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நாம் மிகவும் கவலையடைகிறோம். இதனை தமிழர்களும், முஸ்லிம்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் வாழ வேண்டுமெனில், முதலில் சிங்கள மொழியை கற்றுக் கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் அண்மையில் முல்லைத்தீவுக்கு சென்றிருந்தபோது, எமக்கு தமிழ்நாட்டுக்கு சென்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

வடக்கு ஒன்றும் தமிழ்நாட்டின் ஒரு பகுதி அல்ல. அங்கும் எமது நாட்டின் சட்ட திட்டங்கள் செல்லுபடியாகும். அங்கு, அரசமைப்பு மதிக்கப்படவில்லை. இதனால், அங்கு எம்மால் நீதியை எதிர்பார்க்க முடியாது.

இவற்றையெல்லாம் மாற்றியமைக்கும் ஒரு தலைவர் வரவேண்டும். இதனை நாம் இப்படியே விட்டுவிட்டால், எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியேற்படும். இது சிங்கள பௌத்த நாடாகும். இதனை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டும் இந்த நாட்டில் இருக்கலாம். ஏற்காதவர்கள், தங்களது உடைமைகளுடன் தாராளமாக வேறு நாடுகளுக்கு செல்லலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தனது பிரச்சினை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் வீதிகள், ரயில் பாதைகளை நிர்மாணிக்கவும் குடிநீர் மற்றும் மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதி களை அபிவிருத்தி செய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். இலங்கையில் சிறந்த மருத்துவமனையை யாழ்ப்பாணத்திற்கு வழங்கினோம்.

இந்த அரசாங்கத்திற்கு தற்போதே வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் நினைவுக்கு வந்துள்ளனர். எமது அரசாங்கம் மாத்திரம் அந்த பகுதியில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கியது. தற்போதைய அரசாங்கத்திற்கு அதற்கான எந்த தேவையும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவளித்து அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்கிறது. மக்களின் பிரச்சினைகளை பார்ப்பதில்லை எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## உறுப்பினரின்...

உடுவில் கந்தரோடை பகுதியில் நேற்று இரவு 8.25 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் வீட்டு வாயிலில் படலைக்குள் வந்து 3 பெற்றோல் குண்டுகளை வீசிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)


கொவிசெத
திகதி 2019.09.27
சீட்டிழுப்பு இலக்கம் 2253
U 17 35 43 60

தன நிதானய
திகதி 2019-09-27
சீட்டிழுப்பு இலக்கம் 206
M 07 28 64 68

மஹஜன சம்பத
திகதி 2019/09/27
சீட்டிழுப்பு இலக்கம் 4015
Y 2 3 4 0 0 6

மெகா பவர்
திகதி 2019/09/27
சீட்டிழுப்பு இலக்கம் 0438
R 04 13 61 69 78

0 27 28 51 53
20823
அடுத்த சுப்பர் ஜக்பொட் 141,508,233/=
சீட்டிழுப்பு இலக்கம் 500 திகதி 27 செப் 2019 வர்ணம் பச்சை

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 744 வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.09.27
விசேட இலக்கம் 3730
வெற்றி இலக்கங்கள் 34 41 46 58 ஆங்கில எழுத்து J
தொலைபேசி: 0112 333 548-47

ராசி அதிர்ஷ்டம்
திகதி 27/09/2019 வெற்றி வாரம் 2630 வர்ணம் கடும்நீலம்
வெற்றி இலக்கங்கள் கும்பம் 08 09 11 32
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,921,638
2019/09/28 ம் திகதி சனிக் கிழமை இளம் நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4834824 Web: www.dlb.lk

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 283
சீட்டிழுப்பு திகதி 27.09.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 10 12 63 விதி எண் 08
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.44,568,412
2019.10.02 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 011 333 546-47 www.dlb.lk

# அரச துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு காண

## அமைச்சரவை உபகுழு நியமனம்

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள், ஆசிரியர்கள் உட்பட அரச துறையில் தொழிற்சங்கங்கள் பல சம்பள முரண்பாட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ள நிலையில் அது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உபகுழுவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

ரயில்வே ஊழியர்கள் தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கும் நிலையில் அவரச அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கூட்டினார்.

அதன்போதே அரச துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உப குழுவை ஜனாதிபதி நியமித்தார்.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, வஜிர அபயவர்த்தன, ராஜித சேனரத்ன, ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் அசோக் அபயசிங்க ஆகிய ஐவர் கொண்ட அமைச்சரவை உப குழுவே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு மிக விரைவாக ஆராய்ந்து சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணும் வகையில் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அரச துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் சிறப்பு ஆணைக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார். அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் 3 ஆயிரம் ரூபாய் தொடக்கம் 24 ஆயிரம் ரூபாய் வரை சம்பள அதிகரிப்பு வரும் ஜனவரி முதல் வழங்கப்படும் என்று நிதி அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் மீளவும் முதலில் இருந்து ஆராய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவை உப குழுவை நியமித்துள்ளார். (ம-3)

# தேர்தல் விஞ்ஞாபனத்தை வகுக்க குழு அமைக்குமாறு ரணில் அறிவுறுத்தல்

(கொழும்பு)


ஜனநாயக தேசிய முன்னணியின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தை வகுக்க ஒரு குழுவை அமைக்குமாறு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார் என பிரதமரின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி ராஜித சேனாரத்ன தலைமையில் அமைச்சர் ரவி கருணநாயக்க, அமைச்சர் நவீன் திசாநாயக்க மற்றும் மேலும் இரண்டு உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்படவுள்ளது.

இந்த இரு உறுப்பினர்களும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அன்னச் சின்னத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள ஊடக பிரசாரங்களுக்கு தலைமை தாங்க அமைச்சர் ரவி கருணநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில், ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவு



பெற்ற வேட்பாளர்கள் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட்டனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளிக் கட்சிகள் இணைந்த ஜனநாயக தேசிய முன்னணி ஒக்டோபர் 9 ஆம் திகதி காலி முகத்திடலில் ஒரு கூட்டத்தில் அறிவிக்கப்படவுள்ளது.

மேற்கண்ட முடிவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# எமது ராஜபக்ஷ குடும்பத்திலே நான் தான் மிகவும் அப்பாவி

## என்கிறார் கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

தமது ராஜபக்ச குடும்பத்தில் தாமே மிகவும் அப்பாவியான நபர் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கரும் இதனை தெரிவித்திருந்தார் என கோத்தபாய தெரிவித்துள்ளார்.

தாம் கொடூரமான மனிதர் என சிலர் குற்றம் சுமத்திய போதிலும் தமது குடும்பத்திலேயே தாமே மிகவும் அப்பாவியான நபர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தாம் எவ்வளவு அப்பாவி என்பதனை தமது சகோதரர்களிடம் கேட்டறிந்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின்- இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கருடன் அரை மணித்தியாலப் பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனவும் இந்த சந்திப்பு சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நீடித்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உங்களை கொடூரமான நபர் என சிலர் கூறிய போது நீங்கள் அவ்வாறு இல்லை என்பது புரிகின்றது என ஹானா சிங்கர் கூறிச் சென்றார் எனவும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# இதுவரை காலமும் பதவியில் இருந்த கட்சிகள் நம்மை ஏமாற்றி விட்டனர்

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கவலை

(கரணவாய்)

அரசாங்கத்திற்கு நெருக்குதல்கள் கொடுப்பதனால் தான் இனி வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் சில நன்மைகளை அவர்களிடமிருந்து உத்தரவாதங்களை பெற வேண்டிய அவசியம் இருக் கிறது. அது சும்பந்தமாக சகல கட்சிகளும் சேர்ந்து என்ன மாதிரியான ஒரு கோரிக்கைகளை முன்வைக்கலாம் என்பது சம்பந்தமாக தமிழ் மக்கள் பேரவையின் ஊடாக பேச இருக்கிறோம். ஆகவே இந்த நிலையிலே நாங்கள் ஒருமித்து செயலாற்ற வேண்டிய தேவை இருக்கும். அதேவேளை கட்சி ரீதியாகவும் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. ஏனென்றால் இதுவரை காலமும் தொடர்ந்து பதவியில் இருந்த கட்சிகள் எம்மை ஏமாற்றி விட்டனர்.

வரும் காலத்திலே எங்களை அந்த ஏமாற்றத்தில் இருந்து விடுவித்து நன்மை பெற்றுத் தரக்கூடிய கட்சிகளுக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டுமென் கேட்டுக்கொண்டார் வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியிலுள்ள கடற்தொழிலாளர்கள் உடனான மக்கள் கலந்துரையாடல் நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3,60)

**வேலைவாய்ப்பு**

**கணக்கியல் உதவியாளர்**
எமது பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்காய்வு / கணக்கியல் உதவியாளர்கள் தேவை. வர்த்தகப் பிரிவில் A/L சித்தி எய்தியவர்கள் Chartered, CIMA, ACCA மற்றும் HNDA மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். நாளாந்த படியாக ரூபா 500/= க்கு மேல் வழங்கப்படும்.
தொடர்பு - 0779530496
drsrajanayagam@yahoo.com
(C-7724)

Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
2D-Drawing 3D-Modeling
**Auto CAD**
University of Peratheniya.
University of Moratuwa.
Open University of Sri Lanka.
University of Colombo.
Link: 077-5116320 071-8617972
[Civil & Mechanical]
(C-7723)

**தேவை**
அச்சகத்தில் பணிபுரிவதற்கு கணனியில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
T.P : 077 065 3918, 076 974 0442
(444)

**கடை விற்பனைக்குண்டு**
295/6 K.K.S வீதி
யாழ்ப்பாணத்தில் உள்ள கடை
(1 மாடி) விற்பனைக்குண்டு.
தொடர்புகளிற்கு
0777721740 / 0765944947
(415)

**3 மாத கால அலுவலக பயிற்சிகள்**
2019 இல் A/L எடுத்தவர்கள் மாத்திரம்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
(C-7539)
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
(C-7539)

உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்க
**திறக்கிறது புதிய வாசல்!**
RUSSIA
Student Visa & Work
Option 1
3 மாத மொழிக் கற்கையுடன் தொழிற்சாலை வேலைவாய்ப்பு
Lingva Foreign Language School
Option 2
விரும்பியதுறையில் பட்டக்கல்வி ஏற்பாடு
Aviation - Electronics & Engineering
மிகக் குறைந்த கட்டணங்கள் - வாழ்க்கைச் செலவு குறைந்த நாடு
Latvia, Belarus, Poland, Romaniaவுக்கு அருகே
3ஏ மாதத்தில் பயணமாகலாம்!
மேலதிக விபரங்களுக்கு 0777 324 004, 021 221 9 221
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
www.sikaram.lk
Sikaram Academy
(C-7745)

**CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT**
October 2019 க்கான புதிய பிரிவு ஆரம்பம்
G.C.E O/L உடன்
படித்து முடித்ததும் 100% வேலை வாய்ப்பு
TUTION FEE 30,000/- ONLY
CTHI
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
076 057 9999 / 021 314 6171
(C-7695)

**இந்திய விபூதி விற்பனைக்கு**
எம்மிடம் இருந்து இந்திய விபூதி 1 Kg பக்கற்றினை மொத்தமாக (Rs.100) இற்கும் சில்லறையாக (Rs.110) இற்கும் பெற்றுக் கொள்ளலாம்.
அத்துடன் விபூதி, சந்தணம், குங்குமம், 25g பக்கற் முதல் 1 Kg பக்கற் வரை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(C-7712)
தொடர்புகளுக்கு:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமையில்) தொ.பேசி: 0212222567

**வேலைவாய்ப்பு Job AND Career**
01. முகாமையாளர்
02. உதவி முகாமையாளர்
03. பயிற்றுவிப்பாளர்
04. அலுவலக உதவியாளர்
05. விநியோகஸ்தர்
இப்பதவி வெற்றிடத்துக்கான நேர்முகத் தேர்விற்கு உங்கள் O/L or A/L சான்றிதழ்கள், NIC Copy, BIO DATA உடன் கீழ்க் காணும் விலாசத்திற்கு சமுகம் அளிக்கவும்.
வயது 18 - 26, முன் அனுபவம் அவசிமற்றது. தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் ஆரம்ப வருமானமாக 24, 500/= - 45,000/= EPF, ETFவுடன் விசேட கொடுப்பனவுகள், தங்குமிட வசதி, மருத்துவ வசதி செய்து தரப்படும்.
**NO: 03/100, 3rd Floor, Manipay Road, Jaffna.**
Inner Circle
தொடர்பிற்கு 0767707759 / 0779994807
(452)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.